KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

BUKU PANDUAN KESUSASTERAAN TAMIL (TINGKATAN 4 & 5)

தமிழ் இலக்கிய வழிகாட்டி நூல் (படிவம் 4 & 5)

BAHAGIAN PEMBANGUNAN KURIKULUM
KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA
2021

முன்னுரை

அனைவருக்கும் வணக்கம்.

மலேசியக் கல்வி அமைச்சின் கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவின் தமிழ்மொழிப்பிரிவு, கே.எஸ்.எஸ்.எம். கலைத்திட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டிருக்கும் தமிழ் இலக்கியப் பாடத்திற்கான வழிகாட்டி நூலைத் தயாரித்து அளிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றது.

மலேசியக் கல்வி வரலாற்றிலேயே முதன்முறையாகக் கல்வி அமைச்சால் தமிழ் இலக்கியப் பாடத்திற்கான கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டு அதற்கான பாட நூல்களும் இலவசமாகப் பள்ளிகளுக்கு வழங்கப்படுவது மகிழ்ச்சியளிக்கக்கூடிய நற்செய்தியாகும். இதன் தொடக்கமாக 2021ஆம் ஆண்டில் தமிழ் இலக்கியப் பாடத்திற்கான புதிய நாவல், நாடகம், கவிதை ஆகியவை பள்ளிகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதை நாம் அனைவரும் அறிவோம். இதற்கான வழிகாட்டி நூல் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அவசியம் தேவைப்படும் என்பதைக் கருத்தில் கொண்டு இந்நூல் வெளியிடப்படுகிறது. இந்த நூல் தமிழ் இலக்கியக் கலைத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள இலக்கியக்கூறுகளை விளக்குவதோடுமட்டுமல்லாமல் ஆசிரியர்கள் கற்றல்கற்பித்தலைச் சிறப்பாக நடத்துவதற்கும் பேருதவியாக இருக்கும் எனப் பெரிதும் நம்புகிறோம். அதேவேளையில் கலைத்திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள உள்ளடக்கத்தரங்களையும் கற்றல்தரங்களையும் மாணவர்கள் சிறந்த முறையில் கைவரப்பெறுவதற்கும் இந்நூல் வழிவகுக்கும் என்பது திண்ணம்.

இந்தத் தமிழ் இலக்கிய வழிகாட்டி நூல் உங்கள் கைகளில் தவழ, எங்களுடன் கரங்கோர்த்து முனைப்புடன் செயல்பட்டதோடு எல்லா வகையிலும் பேருதவியாக இருந்த கல்வி அமைச்சின் பல்வேறு பிரிவுகளில் பணிபுரியும் அதிகாரிகளுக்கும் மாநிலக் கல்வி இலாகா அதிகாரிகளுக்கும் பல்கலைக்கழக மற்றும் ஆசிரியர் கல்விக் கழக விரிவுரையாளர்களுக்கும் அனுபவமிக்க அனைத்து தமிழ் இலக்கிய ஆசிரியர்களுக்கும் கல்வி அமைச்சின் சார்பாக எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எஸ்.என்.ராமநாதன்

ராமநாதன் நாகரத்தினம்
தலைமை உதவி இயக்குநர்
(தமிழ்மொழிப்பிரிவுத் தலைவர்)
கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு
மலேசியக் கல்வி அமைச்சு

JAWATANKUASA PEMBINAAN
BUKU PANDUAN KESUSASTERAAN TAMIL
2021

Penasihat
Tn. Haji Azman Bin Haji Adnan
Pengarah
Bahagian Pembangunan Kurikulum

Pengerusi
Pn. Hajah Faridah Binti Mohamed Zain
Timbalan Pengarah
Sektor Bahasa dan Kesusasteraan
Bahagian Pembangunan Kurikulum

Naib Pengerusi
En. Ramanathan a/l Nagarathinam
Ketua Penolong Pengarah
(Ketua Unit Bahasa Tamil)
Bahagian Pembangunan Kurikulum

Pengurus Projek
Pn. Usharani a/p Arumugam
Penolong Pengarah
Bahagian Pembangunan Kurikulum

Ahli Jawatankuasa

Cik Vanaja a/p Ratnam
Bahagian Pembangunan Krikulum

En. Munusamy a/l Subramaniam
Lembaga Peperiksaan

Dr. Kartheges a/l Ponniah
Universiti Pendidikan Sultan Idris

En. Agilan a/l Subramaniam
Bahagian Sumber dan Teknologi Pendidikan

En. Thamil Selvan Perinan
Jabatan Pendidikan Negeri Kedah

En. Kamala Nathan a/l Nakar Salapan
Jemaah Nazir Negeri Melaka

En. Saminathan Govindasamy
IPG Kampus Tuanku Bainun
Pulau Pinang

En. Karthigesu a/l Letchumanan
SMK Kamunting, Kamunting
Perak

Pn. Puspavalli a/p Sathival
SMK Tok Perdana, Sitiawan
Perak

Pn. V Umarani a/p Vellayan
SMK Tunku Besar, Tampin
Negeri Sembilan

En. Ilampuranan a/l Kiramany
SMK Raja Mahadi, Klang
Selangor

En. Krishnakamaraj a/l Gopalsamy
SMK Karak, Karak
Pahang

Pn. Paruathy a/p P Velanganni
SMK Aman Jaya, Sungai Petani
Kedah

Cik Mageswari a/p Thangaraju
SMK Bercham, Ipoh
Perak

En. Ravichandran a/l Subramaniam
SMK Taman Universiti, Skudai
Johor

Pn. Sumadi a/p S. Rajagopal
SMK Taman Perwira, Simpang Ampat
Pulau Pinang

En. Manimaran a/l Govindaraj
SMK Dato' Mohd Said, Nilai
Negeri Sembilan

Pn. Krishnakumari a/p Krishnasamy
SMK Bandar Baru Sentul, Bandar Baru Sentul
Kuala Lumpur

En. Ramani a/l Darman
SMK Chaah, Chaah
Johor

Cik Bebe binti Abdullah
SMK Dato' Abdul Rahman Yaakub, Merlimau
Melaka

Cik D. Ratha a/p V. Damodharam
SMJK Tanah Puteh, Kuantan
Pahang

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA
KESUSASTERAAN TAMIL TINGKATAN 4 DAN 5
தமிழ் இலக்கியம் படிவம் 4 & 5
கவிதைப் பொழில்
கவிதைத் தொகுப்பு
(Antologi Puisi)

1.0	**கவிதைக் கூறுகளின் விளக்கம்**

ஓசைநயம்

எதுகை

கவிதையின் தொடக்கச் சீர்களின் **முதலெழுத்தின் அளவும் இரண்டாம் எழுத்தின் ஓசையும் ஒன்றிவருவது** எதுகையாகும். அடிகளில் எதுகை வருதல் **அடிஎதுகை** எனவும் சீர்களில் எதுகை வருதல் **சீர்எதுகை** எனவும் பெயர் பெறும்.

எ.கா:

பய**ன்**தூக்கார் செய்த உதவி நய**ன்**தூக்கின்
நன்மை கடலிற் பெரிது. (குறள் - 103)

சீர் எதுகை: ப**ய**ன்தூக்கார் - ந**ய**ன்தூக்கின்

தெ**ன்**றல் விளையாடும் சோலை வனமெங்கள்
தேசமென்றே ஒன்றாய்க் கூடுங்கடி
கு**ன்**றினில் நின்றாடுங் கோல மயிலெனக்
கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி

அடி எதுகை: தெ**ன்**றல் – கு**ன்**றினில்

மோனை

கவிதையின் தொடக்கச் சீர்களில், **முதல் எழுத்து ஓசையால் ஒன்றிவருவதே** மோனையாகும். அடிகளில் மோனை வருதல் **அடிமோனை** எனவும், சீர்களில் மோனை வருதல் **சீர்மோனை** எனவும் பெயர் பெறும்.

அ,	ஆ,	ஐ,	ஔ	-	ஒன்றுக்கொன்று மோனை
உ,	ஊ,	ஒ,	ஓ	-	ஒன்றுக்கொன்று மோனை
இ,	ஈ,	எ,	ஏ	-	ஒன்றுக்கொன்று மோனை
ச,	த			-	ஒன்றுக்கொன்று மோனை
ஞ,	ந			-	ஒன்றுக்கொன்று மோனை
ம,	வ			-	ஒன்றுக்கொன்று மோனை

எ.கா:

புல்லாய்ப் பிறந்தேன் நானென்று – நீ
புலம்பிட வேண்டாம் நெல்கூடப்
புல்லின் இனத்தைச் சேர்ந்ததுதான் – அது
பூமியின் பசியைப் போக்கவில்லை?

சீர்மோனை: **பு**ல்லாய்ப் - **பு**லம்பிட
அடிமோனை: **பு**ல்லாய்ப் - **பு**ல்லின்

சந்தம்
சொற்களிலுள்ள ஒலிக்கூறுகள் – ஓசைப் பகுதிகள் **ஒரே தாள அளவுக்குப் பொருந்த** அமைவதே சந்தமாகும். சீர்களில் ஒப்பிடும் சொற்களின் எழுத்துகள் அதே வரிசையில் **அளவாலும் ஓசையாலும் ஒத்திருத்தல்** வேண்டும். இவ்வாறு சொற்கள் அமைவதற்குப் பின்வரும் முறையைப் பின்பற்ற வேண்டும்: அ. சொற்களில் உள்ள **உயிர்களும் உயிர்மெய்களும் குறிலுக்குக் குறில், நெடிலுக்கு நெடில்** என்னும் முறையில் அமைந்திருத்தல் வேண்டும். ஆ. **மெய்யெழுத்தாயின் வல்லினத்திற்கு வல்லினம், மெல்லினத்திற்கு மெல்லினம், இடையினத்திற்கு இடையினம்** என அமைதல் வேண்டும். அதே எழுத்துத் தேவையில்லை. அதே இனம் வந்தால் போதும். இ. மெல்லினமெய்க்கு மட்டும் **அடுத்த உயிர்மெய்யும் அதே இனம்** வரவேண்டும். ஈ. சீர்களில் உள்ள **ய், ர், ழ்** என்ற மூன்று எழுத்துகளும் சந்தக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இவ்வெழுத்துகள் சந்தத்தில் தாக்கத்தை ஏற்படுத்தாது. உ. சீர்களில் உள்ள **ஃ** என்ற ஆய்த எழுத்து ஆய்தத்துக்கு ஆய்தம் என அதே எழுத்து ஒன்றி வரவேண்டும். **எ.கா:** வஞ்ச மனத்துடன் வந்து புகுந்தவர் வாலை யறுத்திட வாராயோ – வரும் வெஞ்ச மருக்கிது வேளை பொருட்குவை மேலும் குவித்துடன் தாராயோ? **சந்தம்:** வஞ்ச - வெஞ்ச வாராயோ - தாராயோ
இயைபு
சீர்களின் **இறுதி அசை ஒன்றிவருவது**. கவிதை அடியில் இறுதியிலிருந்து **இரண்டாம் எழுத்து** ஒன்றி வருவதாகும். **எ.கா 1** தமிழுக்கும் அமுதென்று **பேர்** தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு **நேர்** இறுதியில் **பேர்** - **நேர்** என இறுதி அசைகள் மட்டும் ஒன்றிவந்ததால் இயைபு.

எ.கா 2

வெள்ளிப் பனிமலையின் மீது லாவு**வோம்**
மேலைக் கடல்முழுதும் கப்பல் விடு**வோம்**

இறுதியில் **வோம்** - **வோம்** என இறுதியிலிருந்து இரண்டாம் எழுத்து ஒன்றி வந்ததால் இயைபு.

எ.கா 3

தமிழுண்டு தமிழ்மக்கள் உ**ண்டு**
தமிழுக்கு நாளும்செய் வோம்நல்ல தொ**ண்டு**

இறுதியில் **ண்டு** - **ண்டு** என இறுதியிலிருந்து இரண்டாம் எழுத்து ஒன்றி வந்ததால் இயைபு.

முரண் தொடை

சீர்கள் பொருளால் முரண்பட்டு வருவது முரண் தொடை. அஃதாவது எதிர் எதிர் கருத்துகளாக அமைந்து வருதல் முரண் தொடையாகும்.

எ.கா 1

உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு (குறள் - 339)

உறங்குவது – விழிப்பது பொருள் முரண்படுவதால் முரண்தொடை.

அணி நயம்

உவமை அணி

ஒன்றன் பண்பு, தொழில், பயன் ஆகியவை நன்கு விளங்குமாறு ஒத்ததை ஒப்பிட்டுக் கூறுவது உவமையணி. இதில் முதலில் உவமையும் அடுத்து உவமைப்படுபொருளும் வரும்.

எ.கா:

நிலாமுகம் – நிலா போன்ற முகம்
வேல்விழி – வேல் போன்ற விழி
சங்குநிறப் பால் – சங்கைப் போன்ற வெண்மை நிறத்திலான பால்

உருவக அணி
உவமையும் பொருளும் வேற்றுமை இன்றி ஒன்றென கொள்வது உருவகம். உருவக அணியில் முதலில் உவமைப்படுபொருளும் அடுத்து உவமையும் வரும். **எ.கா:** விழிவேல் – விழி வேலாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது வானத்தாய் – வானம் தாயாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது
பின்வருநிலை அணி
ஒரு கவிதையில் முன்னர் வந்த சொல்லே திரும்பவரினும் **அல்லது** முன்னர் வந்த பொருளே பின்னர்த் திரும்ப வரினும் அது பின்வருநிலையாகும். **எ.கா:** காக்கைச் சிறகினிலே **நந்தலாலா** – நின்றன் கரிய நிறம் தோன்றுதையே **நந்தலாலா**
திரிபு அணி
சீர்களில் முதல் எழுத்து மட்டும் வேறுபட்டிருக்க, மற்றவை எல்லாம் அதே எழுத்துகளாக ஒன்றி வருவது திரிபு அணி. **எ.கா:** கன்னம் சிவந்து அன்னம் நடந்து முன்னம் வரும்பொழுது **க**ன்னம் - **அ**ன்னம் - **மு**ன்னம் (இம்மூன்றிலும் முதலெழுத்து மட்டும் வேறாக, மற்ற எழுத்தெல்லாம் ஒன்றாக வந்ததால் இவை திரிபு அணி)
தற்குறிப்பேற்ற அணி
கவிஞர், ஓர் அஃறிணைப் பொருளை உயர்திணையாக உருவகம் செய்து தன் குறிப்பினையும் கருத்தையும் அதன்மேல் ஏற்றிக் கூறுவதே தற்குறிப்பேற்ற அணியாகும். **எ.கா:** நிலா முகத்தைக் காட்டியது மனிதர்கள் முகம் காட்டும் செயலை அஃறிணைப் பொருளான நிலவுக்கு ஏற்றிப் பாடுகின்றார்.

தன்மை நவிற்சி அணி
ஒன்றன் தன்மையை அப்படியே இயல்பாக அழகுபட நவில்வது தன்மை நவிற்சி அணியாகும். **எ.கா:** தாய்மொழி என்பது தாயின்மொழி – அது தாயும் நீயும் பேசும்மொழி
முரண் அணி
முரணான இரு பொருள்களுக்கிடையில் ஒருமைப்பாடு கற்பித்துக் கூறுவது முரண் அணியாகும். **எ.கா:** சுடும் நிலவு சுடாத சூரியன் குளிர்ந்த தன்மையைக் கொண்ட நிலவு சுடுவதாகவும் சுடும் தன்மையைக் கொண்ட சூரியன் சுடாது என்றும் கூறியிருப்பது முரணாக அமைந்துள்ளது.
உயர்வு நவிற்சி அணி
இயற்கைக்கு அப்பால் நம்பவியலாத அளவு உயர்த்தியோ தாழ்த்தியோ மிகையாகக் கூறுவது. **எ.கா:** கட்டை விரலையும் விடஇமயம் – இன்னும் குட்டை என்பதை எடுத்துச்சொல்! கட்டை விரலைவிட இமயமலை சிறியது என நம்பவியலாத அளவிற்குப் பாடுகிறார்.

மடக்கு அணி
ஓர் அடியில் வந்த சொல் அதே அடியிலோ அடுத்த அடியிலோ மீண்டும் வருவது மடக்கு அணி எனப்படும். ஆனால், மீண்டும் வருகிற சொல் ஒவ்வொரு முறையும் அதே வடிவில் இருந்தாலும் வெவ்வேறு பொருளைக் குறிக்கும். **எ.கா:** வட்ட நிலவினில் **பட்ட** கறையென வாழ்க்கை யமைந்தது பாருங்கடி வெட்ட வெளியினில் **பட்ட** மரமென வேரற்றுப் போனதேன் கூறுங்கடி முதல் அடியில் உள்ள பட்ட என்ற சொல் நிலவில் ஏற்பட்ட கறையை உணர்த்துகிறது. இரண்டாவது அடியில் உள்ள பட்ட என்ற சொல் மடிந்துபோன மரத்தை உணர்த்துகிறது.

2.0 கவிதைகள்

2.1 காலம் பறக்குதடா!

கவிஞர் பின்னணி	**இயற்பெயர்:**	சுந்தரராசு
	புனைபெயர்:	கரு. திருவரசு, பாவலன்
	பிறப்பு:	20.10.1936 (தமிழ்நாடு)
	மறைவு:	8.6.2012
	கல்வி/தொழில்:	• தொடக்கக் கல்வி • நகராண்மைக் கழகத்தில் பணி
	அடை:	வண்ணக் கவிஞர்
	விருது/பரிசு:	• வண்ணக் கவிஞர் விருது • பொற்பதக்கங்கள்
	ஈடுபட்ட துறை:	• மரபுக் கவிதை • இசைப்பாடல் • கட்டுரை • இலக்கண இலக்கிய ஆய்வுகள் • இதழியல் • இலக்கியச் சமய உரைகள் • நாடகங்கள் • கவியரங்கம்
கவிஞர் படைப்பு	**வகைகள்:**	• குறுங்காவியம் (அழகோவியம்) • கவிதைத் தொகுப்பு (வண்ணங்கள், கவியரங்கில் கரு.திருவரசு, நால்வர்) • இசைப் பாடல் தொகுப்பு (முதல் மலர்) • சொற்புணர்ச்சிப் பாக்கள் (பிழை திருத்தம்) • வானொலி நாடகங்கள் (மங்கம்மா மாளிகை) • மேடை நாடகங்கள்
	கொள்கை:	மொழிப்பற்று
	கருப்பொருள்:	பல்வகைக் கருப்பொருள்களைத் தம்முடைய படைப்புகளில் கையாண்டுள்ளார்.

காலம் பறக்குதடா!

காலம் பறக்குதடா! - தமிழா
வாழப் பறந்திடடா!
கோளம் வலம்வரவே - உலகம்
கோலம் புனையுதடா!
நாளும் நடக்கையிலே - புதுமை
நாடிப் பெருகுதடா!
வாழும் வகைகளிலே - வளங்கள்
வந்து குவியுதடா!

நேற்றுத் திருந்தியவர் - உன்னை
நோக்கிப் பழகியவர்
ஊற்றுப் பெருக்கெனவே - இன்பம்
ஊறத் திளைக்கின்றார்!
காற்றுக் கிடையினிலே - அலை
கத்தும் கடலினிலே
ஆட்டம் நடத்துகின்றார்! - நீயேன்
ஆழக் கிணற்றிலுள்ளாய்?

நாளும் முழங்குகின்றாய் - அந்த
நாளில் இருந்ததெல்லாம்!
காலப் பயனறியாய்! - உய்வைக்
காணும் கடன் மறந்தாய்!
பாழும் பிரிவினைகள் - வளர்த்தே
பாதை தவறிவிட்டாய்!
மீளும் வகைமொழிவார் தம்மொடும்
மோதிக் கெடுத்திடுவாய்!

ஒன்றிச் செயல்புரிந்தால் - நாம்
உச்சிக் குயர்வோமென
ஒன்றி முறைவகுப்பாய்! - சின்னாள்
சென்று நிலையறிந்தால்
என்றும் இருந்ததுபோல் - இருப்பாய்
ஏதும் செயல்புரியாய்!
என்றிங் குயர்வதடா! - தமிழா
எண்ணிச் செயல்தொடடா!

- **கவிஞர் கரு. திருவரசு**

பாடுபொருள்:	சமுதாயம்
மையக்கரு:	தமிழர் முன்னேற்றம்

சொற்பொருள் விளக்கம்		
கோளம்	-	பூமி / உலகம்
கோலம்	-	காட்சி / மாற்றங்கள்
வளங்கள்	-	செல்வங்கள்
குவியுதடா	-	குவியலாய்ச் சேர்வது
ஊற்று	-	நீரூற்று
ஊறத்	-	ஆழ்ந்து / மூழ்கி
ஆழக் கிணற்றிலுள்ளாய்	-	பின்தங்கி
முழங்குகின்றாய்	-	பெருமிதத்துடன் பேசுகின்றாய்
உய்வை	-	முன்னேற்றம்
கடன்	-	கடமை
பாழும்	-	பயனற்ற
மீளும்	-	மீட்சி பெற
வகைமொழிவார்	-	வழிகளைக் கூறுபவர்
மோதி	-	சண்டையிட்டு
ஒன்றி	-	ஒற்றுமையாக
உச்சி	-	உயர்நிலை
சின்னாள்	-	சில நாள்

தெரிநிலைக் கருத்துகள்

கண்ணி 1

காலம் விரைந்து நகர்கின்றது. காலச் சுழற்சியில் உலகில் பல மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமாய் உள்ளன. இக்கால ஓட்டத்தில் உலகில் பல புதுமைகள் நிகழ்கின்றன. மனித வாழ்க்கையில் செல்வங்கள் பெருகுகின்றன. ஆகவே, தமிழர்கள் இக்கால மாற்றத்திற்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

கண்ணி 2

மேலோங்கி இருந்த தமிழர்களைப் பார்த்துத் தங்கள் வாழ்க்கையைச் சீர்செய்து கொண்டவர்கள் எல்லாம், மிகக் குறுகிய காலத்திலேயே எல்லாச் செல்வங்களையும் குவித்து இன்புற்று வாழ்கின்றனர். மேலும், ஆகாயம் மற்றும் கடல் வழியாகவும் பயணப்பட்டுத் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்கின்றனர். ஆனால், தமிழர்கள் மட்டும் ஏன் அன்று இருந்த நிலையிலிருந்து தாழ்ந்து இருக்கின்றனர் என்று கவிஞர் வினவுகிறார்.

கண்ணி 3

தமிழர்கள் இன்னும் பழம்பெருமையையே பேசிக் கொண்டிருக்கின்றனர். காலத்தின் அருமையை உணராததால் இன்னும் முன்னேற்றம் காணும் வழிமுறைகளை அறியாமல் இருக்கின்றார்கள். சமுதாயத்தில் தீமைகளை ஏற்படுத்தும் வேற்றுமைகளைக் கடைப்பிடிப்பதால் வாழ்க்கையில் முன்னேறும் நோக்கத்திலிருந்து விலகிவிட்டனர். இத்தகைய அறியாமையிலிருந்து மீள்வதற்கான வழியைக் காட்டுகின்றவர்களையும் வீணாகப் பகைத்து வாய்ப்பினைக் கெடுத்துக் கொள்கின்றார்கள்.

கண்ணி 4

ஒற்றுமையாகச் செயல்பட்டால் உயர்ந்த நிலையை அடைய முடியும் என்ற திட்டத்தை முன் வைத்தும் சில காலம் கடந்த பின்னும் எந்த மாற்றமும் இல்லாமல் செயலற்றுக் கிடப்பார்கள். இந்த நாட்டில் எப்பொழுது தமிழர்கள் உயரப்போகிறார்கள்? தமிழ்ச் சமுதாயம் இதை எண்ணத்தில் கொண்டு செயலில் இறங்க வேண்டும்.

புதைநிலைக் கருத்துகள்

1. எல்லா சமூகத்தினரும் இருக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்தி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்களாகிய நாமும் பொருளாதாரத்தை உயர்த்தி வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

2. தமிழர்கள் பொருளாதாரத்தில் சிறந்து விளங்க உயரிய பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் கட்டிக்காக்க வேண்டும்.

3. பழம்பெருமைகளையுடைய தமிழினம் இன்று பிரிவினைகளால் சீரழிந்துகொண்டிருக்கிறது. இத்தகைய சிக்கலிலிருந்து தமிழினம் மீண்டு வரவேண்டும்

4. தமிழர்கள் ஒன்றுபட்டால் வாழ்வில் உயரலாம்.

**** வேறு ஏற்புடைய தெரிநிலை, புதைநிலைக் கருத்துகள் இருப்பின் அவற்றையும் ஏற்றுக் கொள்ளலாம்.***

நயங்கள்			
1.	**ஓசை நயம்**		
	1.1	**எதுகை**	
		கண்ணி 1 கா**ல**ம் - கோ**ள**ம் நா**ளு**ம் - வா**ழு**ம் **கண்ணி 2** நே**ற்**றுத் - ஊ**ற்**றுப்	**கண்ணி 3** பா**ழு**ம் - மீ**ளு**ம் **கண்ணி 4** ஒ**ன்**றிச் - ஒ**ன்**றி எ**ன்**றும் - எ**ன்**றிங்
	1.2	**மோனை**	
		கண்ணி 1 **கோ**ளம் - **கோ**லம் **நா**ளும் - **நா**டிப் **வா**ழும் - **வ**ந்து **கண்ணி 2** **ஊ**ற்றுப் - **ஊ**றத் **கா**ற்றுக் - **க**த்தும் **ஆ**ட்டம் - **ஆ**ழக்	**கண்ணி 3** **நா**ளும் - **நா**ளில் **கா**லப் - **கா**ணும் **பா**ழும் - **பா**தை **கண்ணி 4** **ஒ**ன்றிச் - **உ**ச்சிக் **எ**ன்றும் - **ஏ**தும் **எ**ன்றிங் - **எ**ண்ணிச்
	1.3	**சந்தம்**	
		கண்ணி 1 காலம் – கோளம் நாளும் – வாழும் பெருகுதடா – குவியுதடா **கண்ணி 2** ஊற்று – காற்று	**கண்ணி 3** நாளும் - பாழும் - மீளும்
	1.4	**இயைபு**	
		கண்ணி 1 பறக்குதடா பறந்திடடா புனையுதடா பெருகுதடா குவியுதடா	**கண்ணி 3** பயனறியாய் மறந்தாய் தவறிவிட்டாய் கெடுத்திடுவாய்

		கண்ணி 2 திருந்தியவர் பழகியவர் கிடையினிலே கடலினிலே	**கண்ணி 4** குயர்வதடா செயல்தொடடா
2.	**அணி நயம்**		
	2.1	**உவமை அணி**	
		• ஊற்றுப் பெருக்கெனவே	
	2.2	**பின்வருநிலை அணி**	
		ஒன்றி - ஒன்றி	
	2.3	**திரிபு அணி**	
		நேற்று – ஊற்று – காற்று நாளும் – மீளும்	
	2.4	**தற்குறிப்பேற்ற அணி**	
		• உலகம் கோலம் புனையுதடா! • அலை கத்தும் கடலினிலே	
	2.5	**தன்மை நவிற்சி அணி**	
		நாளும் முழங்குகின்றாய் - அந்த நாளில் இருந்ததெல்லாம்!	
3.	**பொருள் நயம்**		
	3.1	**தெரிபொருள்**	
		கால வளர்ச்சிக்கு ஏற்பப் பல துறைகள் அசுர வளர்ச்சி அடைந்து வருகின்றன. காலத்திற்கேற்பத் தமிழர் முன்னேற்றம் அமைய வேண்டும் என்பதைக் கவிஞர் காலம் பறக்கின்றது என நயமாக எடுத்துரைக்கின்றார்.	
	3.2	**புதைபொருள்**	
		தமிழர்களை நோக்கி கவிஞர் ‘காலம் பறக்குதடா!’ என உரக்கப் பாடி உறங்கிக் கொண்டிருக்கும் தமிழினத்திற்கான ஓர் எச்சரிக்கை ஒலியெழுப்பிக் காலத்தோடு செயல்படுவதற்கு நயமாக அறைகூவல் விடுக்கிறார்.	

4.	**சொல்நயம்**	
		• கோலம் புனையுதடா • ஊற்றுப் பெருக்கெனவே • இன்பம் ஊறத் திளைக்கின்றார் • அலை கத்தும் கடலினிலே • ஆழக் கிணற்றிலுள்ளாய்? • கடன் மறந்தாய்

**** வேறு நயங்கள் இருப்பின் அவற்றையும் கவனத்தில் கொள்ளவும்.***

தாக்கம்

1. உலக முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு தமிழர்கள் வாழவில்லை என்பது வேதனையளிக்கிறது.

2. தமிழர்களிடம் பலவற்றைக் கற்றுக் கொண்டு பிற இனத்தவர் உயர்ந்துவிட்டதை எண்ணும்போது ஏமாற்றம் அளிக்கிறது.

3. கடந்த காலப் பெருமைகளையே பேசி காலத்தை விரயம் செய்யும் தமிழர்களின் அறியாமையை எண்ணும்போது வருத்தமளிக்கிறது.

4. பிரிவினைகளை வளர்த்துச் சீரழியும் தமிழர்களின் போக்கு வெறுப்புணர்வை ஏற்படுத்துகிறது.

5. தமிழர்கள் சொல்வதுபோல் செயல்படுவதில்லை என்பது ஏமாற்றமளிக்கிறது.

படிப்பினை

1. உலக முன்னேற்றத்திற்கு ஏற்பத் தமிழர்கள் தங்கள் வாழ்வைச் சீரமைத்தால்தான் வாழ்க்கையில் முன்னேற முடியும்.

2. பல வகையான ஆற்றல்களையும் திறன்களையும் உடைய தமிழர்கள் அதனை முழுமையாகப் பயன்படுத்தி, தங்கள் வாழ்க்கையில் முன்னேற முற்படுதல் அவசியம்.

3. பழம்பெருமைகளைப் பேசுவதை விட்டுவிட்டுத் தற்காலச் சூழலுக்கேற்ப செயலில் ஈடுபட்டு முன்னேறுதல் முக்கியம்.

4. தமிழர்கள் தங்களிடையே உள்ள வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையை வளர்க்க வேண்டும்.

5. உலக முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு தமிழர்கள் வாழவேண்டும்.

**** வேறு ஏற்புடைய தாக்கம் மற்றும் படிப்பினையையும் ஏற்றுக்கொள்ளலாம்.***

2.2	**நாளை நமதே!**

கவிஞர் பின்னணி	**இயற்பெயர்:**	கா.மாரிமுத்து
	புனைபெயர்:	காசிதாசன்
	பிறப்பு:	30.9.1956 (தமிழ்நாடு)
	கல்வி/தொழில்:	• பி.யு.சி கல்லூரி படிப்பு • பத்திரிகைத் துறை
	விருது/பரிசு:	• அனைத்துலக தமிழ் இசைப்பாடல் போட்டியில் முதல் பரிசு • திருக்குறள் மாநாட்டில் மரபுக் கவிதைக்கு முதல் பரிசு • முருகன் மாநாட்டில் காவடிச் சிந்து முதல் பரிசு
	ஈடுபட்ட துறை:	• மரபுக் கவிதை • இசைப்பாடல் • கட்டுரை • இலக்கண - இலக்கிய ஆய்வு • இதழியல் • இலக்கிய சமய உரைகள்
கவிஞர் படைப்பு	**வகைகள்:**	• கவிதைத் தொகுப்பு - (சாமிவேலர் புகழ்மாலை-1988) • மரபுக் கவிதை (புதுவெள்ளம்-1997, அரட்டை அரங்கம் - 2009)
	கொள்கை:	மொழிப்பற்று
	கருப்பொருள்:	பல்வகைக் கருப்பொருள்களைத் தம்முடைய படைப்புகளில் கையாண்டுள்ளார்.

நாளை நமதே

தென்றல் விளையாடும் சோலை வனமெங்கள்
தேசமென்றே ஒன்றாய்க் கூடுங்கடி
குன்றினில் நின்றாடுங் கோல மயிலெனக்
கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி

தோட்டப் புறத்தினில் தொட்ட இடத்தினில்
நொய்வமும் செம்பனை ஈயமெலாம்
பாட்டன் வியர்வை நீர் பட்ட சிறப்பென
பாடுங்கடி பாடி ஆடுங்கடி

பத்து மலையினில் கொட்டும் மழையென
பார்க்க வருகின்ற கூட்டமெலாம்
முத்துக் கலையினில் மோகம் அடைந்ததால்
முல்லை மலர்களே கொட்டுங்கடி

முத்து மணித்திரள் மூழ்கி எடுத்தவர்
முன்னுரை வாழ்வெனக் கொட்டுங்கடி
முத்திரையிட்டவர் மூத்த குடியினர்
முத்தமிழர் என்றே கொட்டுங்கடி

வட்ட நிலவினில் பட்ட கறையென
வாழ்க்கை யமைந்தது பாருங்கடி
வெட்ட வெளியினில் பட்ட மரமென
வேரற்றுப் போனதேன் கூறுங்கடி

நாளை வருங்காலம் நம்மவர்க்கே என்று
நம்தமிழ்ப் பெண்களே கொட்டுங்கடி
வேளை வருமென்று வீணில் உறங்காமல்
வீறுகொண்டே கும்மி கொட்டுங்கடி!

- **கவிஞர் காசிதாசன்**

பாடுபொருள்:	வாழ்க்கை
மையக்கரு:	தமிழர் தம் சிறப்புகளை அறிந்தால் எதிர்காலம் சிறக்கும்

சொற்பொருள் விளக்கம்		
கோல மயிலென	-	அழகிய மயில்
நொய்வமும்	-	ரப்பரும்
பாட்டன்	-	அப்பாவின் அப்பா (தந்தை வழித் தாத்தா)
மோகம்	-	ஆசை / விருப்பம்
முத்துக் கலையினில்	-	அழகிய / சிறந்த
முத்து மணித்திரள்	-	முழுமையான முத்து
முன்னுரை	-	முன்மாதிரியான
முத்தமிழர்	-	சேர, சோழ, பாண்டியன் வழி வந்தவர்
பட்ட மரமென	-	மடிந்துபோன மரம்
வீறுகொண்டே	-	எழுச்சியுடன்

தெரிநிலைக் கருத்துகள்

கண்ணி 1
இயற்கை அழகு மிகுந்தது எங்கள் நாடென்றே ஒன்றாய்க் கூடுவோம். குன்றினில் நின்று தோகை விரித்தாடும் மயிலைப்போல கும்மி கொட்டி மகிழ்வோம்.

கண்ணி 2
தோட்டத்தில் பார்க்கும் திசைகளிலெல்லாம் காணும் ரப்பர், செம்பனை, ஈயம் ஆகிய வளங்கள் எல்லாம் நம் முன்னோர்களின் சிறந்த உழைப்பைப் பறைசாற்றுகின்றன. அவை நமக்குக் கிடைத்த பெருமையென்று பாடி மகிழ்வோம்.

கண்ணி 3
பத்துமலைக்குத் திரண்டு வருகின்ற மக்கள் கூட்டமெல்லாம் அங்குக் காணப்படும் உயர்வான கலை நுட்பத்தைக் கண்டு மனம் மயங்குகின்றன. அப்பெருமையை எண்ணி நாம் கும்மி கொட்டுவோம்.

கண்ணி 4
ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுத்துச் சிறப்பாக வாழ்ந்த நம் முன்னோர்களின் வாழ்க்கை நமக்கு நல்லதொரு வழிகாட்டி. உலகில் சிறந்து விளங்கியவர்கள் முத்தமிழர்கள் என்று கும்மி கொட்டி மகிழ்வோம்.

கண்ணி 5
முழு நிலவில் ஏற்பட்ட கறையைப்போல மலேசியத் தமிழர்களின் வாழ்விலும் களங்கம் இருப்பதை அறியவேண்டும். திறந்த வெளியிலுள்ள பட்டுப்போன மரம்போல் தமிழர்களின் வாழ்வு சீர்குலைந்து போனதற்கான காரணத்தையும் அறியவேண்டும்.

கண்ணி 6
எதிர்காலம் நமது சமுதாயத்திற்கு உரியது என்ற நம்பிக்கையோடு தமிழ்ப் பெண்களே நீங்கள் கும்மி கொட்டுங்கள். நாம் வீணாகப் பொழுதைக் கழிக்காமல், வாய்ப்புக்குக் காத்திராமல் எழுச்சியோடு செயல்படுவோம்.

புதைநிலைக் கருத்துகள்

1. மலேசிய நாட்டின் இயற்கை எழிலைப் போற்ற வேண்டும்.

2. நாட்டின் மேன்மைக்குக் கடுமையாக உழைத்த நம் முன்னோர்களின் தியாகத்தைப் போற்ற வேண்டும்.

3. நம் முன்னோர்கள் போற்றி வளர்த்த கலையை நாம் கட்டிக் காக்கவேண்டும்.

4. நம் முன்னோர்களின் பண்பட்ட வாழ்க்கையை நாம் பின்பற்ற வேண்டும்.

5. தமிழர்கள் தங்கள் வாழ்க்கையில் உள்ள குறைகளைச் சீர்செய்து வாழவேண்டும்.

***** ***வேறு ஏற்புடைய தெரிநிலை, புதைநிலைக் கருத்துகள் இருப்பின் அவற்றையும் ஏற்றுக் கொள்ளலாம்.***

நயங்கள்			
1.	**ஓசை நயம்**		
	1.1	**எதுகை**	
		கண்ணி 1 தெ**ன்**றல் - கு**ன்**றினில் **கண்ணி 2** தோ**ட்**டப் - பா**ட்**டன் **கண்ணி 3** ப**த்**து - மு**த்**து	**கண்ணி 4** மு**த்**து - மு**த்**திரையிட்டவர் **கண்ணி 5** வ**ட்**ட - வெ**ட்**ட **கண்ணி 6** நா**ளை** - வே**ளை**
	1.2	**மோனை**	
		கண்ணி 1 **தெ**ன்றல் - **தே**சமென்றே **கு**ன்றினில் - **கொ**ட்டுங்கடி **கண்ணி 2** **பா**ட்டன் - **பா**டுங்கடி **கண்ணி 3** **ப**த்து - **பா**ர்க்க **மு**த்துக் - **மு**ல்லை	**கண்ணி 4** **மு**த்து - **மு**ன்னுரை **மு**த்திரையிட்டவர் - **மு**த்தமிழர் **கண்ணி 5** **வ**ட்ட - **வா**ழ்க்கை **வெ**ட்ட - **வே**ரற்றுப் **கண்ணி 6** **நா**ளை - **ந**ம்தமிழ்ப் **வே**ளை - **வீ**றுகொண்டே
	1.3	**சந்தம்**	
		கண்ணி 2 தொட்ட - பட்ட **கண்ணி 3** மலையினில் - கலையினில்	**கண்ணி 5** வட்ட - பட்ட வெட்ட - பட்ட பாருங்கடி - கூறுங்கடி **கண்ணி 6** நாளை - வேளை

	1.4	**இயைபு**	
		கண்ணி 1 கூடுங்**கடி** - கொட்டுங்**கடி** **கண்ணி 4** கொட்டுங்**கடி** – கொட்டுங்**கடி**	**கண்ணி 5** பாருங்**கடி** - கூறுங்**கடி** **கண்ணி 6** கொட்டுங்**கடி** - கொட்டுங்**கடி**
2.	**அணி நயம்**		
	2.1	**உவமை அணி**	
		• கோல மயிலென • கொட்டும் மழையென • முத்துக் கலையினில் • பட்ட கறையென • பட்ட மரமென	
	2.2	**உருவக அணி**	
		- சோலை வனம் - வளமான நாடு • முல்லை மலர்களே - பெண்கள்	
	2.3	**பின்வருநிலை அணி**	
		• கொட்டுங்கடி – கொட்டுங்கடி • பட்ட – பட்ட	
	2.4	**திரிபு அணி**	
		தொட்ட - பட்ட பாடுங்கடி - ஆடுங்கடி பத்து - முத்து மலையினில் - கலையினில் வட்ட - பட்ட வெட்ட - பட்ட நாளை - வேளை	
	2.5	**தற்குறிப்பேற்ற அணி**	
		• தென்றல் விளையாடும் சோலை	

	2.6	**மடக்கு அணி**	
		பட்ட கறையென – **பட்ட** மரமென	
	2.7	**தன்மை நவிற்சி அணி**	
		தோட்டப் புறத்தினில் தொட்ட இடத்தினில் நொய்வமும் செம்பனை ஈயமெலாம்	
3.	**பொருள் நயம்**		
	3.1	**தெரிபொருள்**	
		நாளைய வாழ்க்கை வளமாக அமைய மலேசியத் தமிழர்கள் தங்கள் வாழ்க்கையை இன்றே வடிவமைக்க வேண்டும் என்ற கருத்தில் இக்கவிதையை இயற்றியுள்ளார் கவிஞர்அமைதியும் அழகும் கொழிக்கும் . இந்த நாட்டில் தமிழர்களின் வெற்றிச் சுவடுகளும் சாதனைகளும் ஆனால் அவையெல்லாம் பல சிக்க .ஏராளம்ல்களால் கறைபட்டுச் சிறுமையுற்றதாகக் கவிஞர் நயமாகப் பாடுகின்றார்.	
	3.2	**புதைபொருள்**	
		இந்நாட்டுத் தமிழர்களின் எதிர்காலம் வினாக்குறியாகி விடுமோ என்ற அச்சத்தை இக்கவிதையின்வழி அறிய முடிகின்றதுஇன்றைய . தமிழர்களின் வாழ்க்கை வெட்ட வெளியில் பட்ட மரமாக நிற்பதாகக் கூறுகின்றார்அரசியல் ., பொருளாதாரம், கல்வி போன்ற துறைகளில் பின்தங்கியிருக்கின்ற நிலையையே இது உணர்த்துகின்றது.	
4.	**சொல்நயம்**		
		• சோலை வனம் • கோலமயில் • தொட்ட இடத்தினில் • கொட்டும் மழையென • முத்துக் கலையினில் • முல்லை மலர்களே • முத்து மணித்திரள்	• முன்னுரை • முத்திரையிட்டவர் • முத்தமிழர் • பட்ட கறை • பட்டமரமென • வேரற்று

****   வேறு நயங்கள் இருப்பின் அவற்றையும் கவனத்தில் கொள்ளவும்.***

தாக்கம்

1. மலேசியாவின் இயற்கை அழகு பெருமித உணர்வைக் கொடுக்கின்றது.

2. தோட்டப்புறங்களில் வாழ்ந்த நமது முன்னோர்களின் கடுமையான உழைப்பினால் நாடு வளர்ச்சியடைந்தது என்பது பெருமைக்குரியது.

3. இந்நாட்டில் தமிழர்கள் தங்கள் கலையைப் போற்றி வளர்த்தது பெருமையளிக்கின்றது.

4. தமிழர்கள் உலகத்திற்கு நாகரிகத்தைக் கற்றுக் கொடுத்தது பெருமிதம் அளிக்கின்றது.

5. இன்றைய நிலையில் தமிழர்கள் வாழ்க்கையில் பல குறைகளை உடையவர்களாக இருப்பது வேதனை அளிக்கின்றது.

படிப்பினை

1. இயற்கையைப் போற்றுவதோடு அந்த இயற்கை அழியாமல் காப்பது நமது கடமையாகும்.

2. நாட்டின் வளப்பத்திற்காக உழைத்த நம் முன்னோர்களின் தியாகத்தை நாம் போற்ற வேண்டும். வரலாற்றில் அவர்களின் பங்களிப்பு இடம்பெறுவது அவசியம்.

3. இன்றைய தலைமுறையினர் நம் கலைகள் அழியாமல் இருப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

4. நாட்டில் பின்தங்கியிருக்கும் நமது நிலைமையைக் களைவதற்கு நாம் முயல்வது அவசியம்.

5. இந்த நாட்டில் நமக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறதென்று நாம் நம்பிக்கைக் கொள்ள வேண்டும்.

6. உலக முன்னேற்றத்திற்கு ஏற்பத் தமிழர்கள் தங்கள் வாழ்வைச் சீரமைத்துக்கொள்ள வேண்டும்.

**** வேறு ஏற்புடைய தாக்கம் மற்றும் படிப்பினையையும் ஏற்றுக்கொள்ளலாம்.***

2.3	**சஞ்சிக்கூலி**

கவிஞர் பின்னணி	**இயற்பெயர்:**	மு.கருப்பையா
	புனைபெயர்:	காரைக்கிழார்
	பிறப்பு:	13.10.1941 (மலேசியா)
	மறைவு:	17.1.2016
	கல்வி/தொழில்:	• தமிழ்ப்பள்ளி • அச்சக உரிமையாளர் • பத்திரிகைத் துறை
	அடை:	கவிச்சுடர் / மரபுக் கவிஞர்
	விருது/பரிசு:	• துன் டாக்டர் மகாதீர் முகம்மது அவர்களிடம் பொற்பதக்கம் பெற்றார். • பல போட்டிகளில் பரிசு பெற்றார்.
	ஈடுபட்ட துறை:	• மரபுக் கவிதை • இசைப்பாடல் • கட்டுரை • இலக்கண இலக்கிய ஆய்வு • இதழியல் • இலக்கிய சமய உரைகள்
கவிஞர் படைப்பு	**வகைகள்:**	• பாவியம் (1975-அலையோசை) • எழுச்சிப்பாக்கள் (1977-கணைகள்) • கவிதைகள் (1980-பூச்சரம்) • சிறுகதைகள் (நவமலர்கள்) • கட்டுரைத் தொகுப்பு (கோவைக்கோவை) • திரைப்படப் பாடல் (தணியாத தாகம்) • இசைப்பாடலோடு கவிதை • கதை/புதினம்- (பயணம்) / நாடகம்
	கொள்கை:	• சமூக அக்கறை
	கருப்பொருள்:	• பல்வகைக் கருப்பொருள்களைத் தம்முடைய படைப்புகளில் கையாண்டுள்ளார்.

சஞ்சிக்கூலி

சஞ்சிக் கூலியில் வந்தேன் என்று
தலைமுறையாகச் சொல்லிச் சொல்லி
வஞ்சித் தவனை வாழ்த்தி வாழ்த்தி
வாழ்ந்தாருக்கே மாரடித்தாய் – உன்
வாணா ளெல்லாம் போரடித்தாய்!

சஞ்சிக் கூலியில் வந்தாலென்ன?
சம்பாதித்ததுவும் கொஞ்சமா என்ன?
கஞ்சிக் கின்றும் கையை ஏந்திக்
கடைவா சலிலே நிற்கின்றாய் – உன்
கட்டுடலைத்தான் விற்கின்றாய்!

காலை எழுந்த கடன்முடி யாமல்
கையில் வாளிக் கனம்குறையாமல்
பாலை நிரப்பிக் கொடுத்ததை யன்றிப்
பலனை முழுதும் கண்டாயா? – உன்
பங்கை முழுதாய்க் கொண்டாயா?

தேடிய பணத்தில் ஓடிய செலவைத்
திடமாய்க் கொஞ்சம் சேமித்திருந்தால்
வாடிய நாளே வாய்த்திருக் காது
மற்றவர் போல நின்றிருப்பாய்! – வெறும்
மழுங்க னாகவா இன்றிருப்பாய்?

- **கவிஞர் காரைக்கிழார்**

பாடுபொருள்:	சஞ்சிக்கூலி
மையக்கரு:	தோட்டப்புறத் தமிழர்களின் அவலம்

சொற்பொருள் விளக்கம்		
சஞ்சிக் கூலி	-	19-20ம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவிலிருந்து மலாயாவுக்குக் கூலி வேலைக்காக அழைத்து வரப்பட்ட இந்தியர்களைக் குறிக்கும் சொல். இது *ஜஞ்ஜி* என்னும் மலாய்ச் சொல்லிலிருந்து உருவானது. தமிழில் இஃது ஒப்பந்தம் எனப்படும். ஆங்கிலேயர்களால் நியமிக்கப்பட்ட கங்காணிகள் இவர்களை ஒப்பந்தக் கூலிகளாகக் கொண்டு வந்து சேர்த்தனர்.
வஞ்சித்தவனை	-	ஏமாற்றியவனை/ துன்பத்துக்குள்ளாக்கியவனை
மாரடித்தாய்	-	இன்னல்பட்டாய்
போரடித்தாய்	-	போராடினாய்
வாசலிலே	-	நுழைவாயிலிலே
கடன்	-	கடமை
மழுங்கனாகவா	-	அறிவுக் கூர்மை குறைந்தவனாக

தெரிநிலைக் கருத்துகள்

கண்ணி 1
ஒப்பந்தக்கூலிகளாக இங்கு வந்தோமென காலம் காலமாகச் சொல்லிச் சொல்லி ஏமாற்றியவர்களைப் போற்றிக்கொண்டிருந்தாய். அதோடு மட்டுமல்லாமல் பல இன்னல்களையும் அனுபவித்து வாழ்நாளெல்லாம் போராடினாய்.

கண்ணி 2
ஒப்பந்தக் கூலிகளாய் வந்தாலும் அதிகமாகவே சம்பாதித்தாய். இருப்பினும், இன்னும் வறுமையில் வாடி நிற்கும் நிலை தொடர்கின்றது. அடிமைகளாகப் பிறரிடம் கையை ஏந்தி உடலைப் பயன்படுத்தித்தான் பிழைக்கின்றாய்.

கண்ணி 3
காலையில் எழுந்ததும் உன் கடமை முடியாமல் ரப்பர் மரம் சீவி, அதில் கிடைக்கும் பாலை வாளியில் நிரப்பிக் கொடுத்ததைத் தவிர, வேறு எந்தப் பயனையும் நீ பெற்றாயா? எந்தப் பலனையும் நீ முழுமையாக அனுபவித்தாயா?

கண்ணி 4
வருந்தி உழைத்துப் பெற்ற பணத்தைச் சிக்கனமாகச் செலவு செய்து சேமித்திருந்தால், வறுமையில் வாடியிருக்க மாட்டாய். பிறரைப்போல வாழ்வில் முன்னேறி இருப்பாய். அறிவுக் கூர்மை குறைந்தவனாகவா இன்று இருந்திருப்பாய்?

புதைநிலைக் கருத்துகள்

1. இந்தியர்கள் ஒப்பந்தக் கூலிகளாகத் தென்னிந்தியாவிலிருந்து இந்த நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டார்கள்.

2. இந்தியர்கள் கடினமாக உழைத்து இந்நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டனர்.

3. இந்தியர்கள் அறியாமை நீக்கி விழிப்புணர்வோடு செயல்படவேண்டும்.

4. நம் உழைப்புக்கேற்ற பலனைக் கட்டாயம் நாமே அனுபவிக்க வேண்டும்.

*** வேறு ஏற்புடைய தெரிநிலை, புதைநிலைக் கருத்துகள் இருப்பின் அவற்றையும் ஏற்றுக் கொள்ளலாம்.***

நயங்கள்			
1.	**ஓசை நயம்**		
	1.1	**எதுகை**	
		கண்ணி 1 ச**ஞ்**சிக் - வ**ஞ்**சித் **கண்ணி 2** ச**ஞ்**சிக் - க**ஞ்**சிக்	**கண்ணி 3** கா**லை** - பா**லை** **கண்ணி 4** தே**டி**ய - வா**டி**ய
	1.2	**மோனை**	
		கண்ணி 1 **ச**ஞ்சிக் - **த**லைமுறையாகச் **வ**ஞ்சித் - **வா**ழ்ந்தாருக்கே - **வா**ணா **கண்ணி 2** **ச**ஞ்சிக் - **ச**ம்பாதித்ததுவும் **க**ஞ்சிக் - **க**டைவாசலிலே - **க**ட்டுடலைத்தான்	**கண்ணி 3** **கா**லை - **கை**யில் **பா**லை - **ப**லனை - **ப**ங்கை **கண்ணி 4** **தே**டிய - **தி**டமாய்க் **வா**டிய - **ம**ற்றவர் - **ம**ழுங்க
	1.3	**சந்தம்**	
		கண்ணி 1 மாரடித்தாய் - போரடித்தாய் சஞ்சி - வஞ்சி **கண்ணி 2** சஞ்சி - கஞ்சி நிற்கின்றாய் - விற்கின்றாய்	**கண்ணி 3** காலை - பாலை கண்டாயா - கொண்டாயா **கண்ணி 4** தேடிய - ஓடிய தேடிய - வாடிய நின்றிருப்பாய் - இன்றிருப்பாய்
	1.4	**இயைபு**	
		கண்ணி 1 சொல்லி - சொல்லி வாழ்த்தி - வாழ்த்தி மாரடித்தாய் - போரடித்தாய் **கண்ணி 2** நிற்கின்றாய் - விற்கின்றாய்	**கண்ணி 3** கண்டாயா - கொண்டாயா **கண்ணி 4** நின்றிருப்பாய் - இன்றிருப்பாய்

	1.5	**முரண் தொடை**
		வஞ்சி - வாழ்த்தி
2.	**அணி நயம்**	
	2.1	**பின்வருநிலை அணி**
		• சொல்லிச் சொல்லி • வாழ்த்தி வாழ்த்தி
	2.2	**திரிபு அணி**
		• மாரடித்தாய் – போரடித்தாய் • சஞ்சி – கஞ்சி • விற்கின்றாய் – நிற்கின்றாய் • கண்டாயா – கொண்டாயா • காலை – பாலை • தேடிய – ஓடிய - வாடிய • நின்றிருப்பாய் – இன்றிருப்பாய்
	2.3	**தன்மை நவிற்சி அணி**
		சஞ்சிக் கூலியில் வந்தேன் என்று தலைமுறையாகச் சொல்லிச் சொல்லி வஞ்சித் தவனை வாழ்த்தி வாழ்த்தி வாழ்ந்தாருக்கே மாரடித்தாய்
3.	**பொருள் நயம்**	
	3.1	**தெரிபொருள்**
		ஒப்பந்தக் கூலிகளாய் வந்த இந்திய தோட்டத் தொழிலாளிகள் தங்கள் அறியாமையாலும் சேமிப்புச் சிந்தனை இல்லாமையாலும் வறுமையில் உழல்வது பற்றி நயமாகக் கவிஞர் எடுத்துரைக்கின்றார்.
	3.2	**புதைபொருள்**
		தங்கள் உழைப்பின் பலனை அனுபவித்து வாழ இந்தியர்கள் விழிப்புணர்வோடு செயல்படுவது அவசியம் என்பதை நயமாக கவிஞர் கூறுகின்றார்.

4.	**சொல்நயம்**
	• மாரடித்தாய் • போரடித்தாய் • கட்டுடலைத்தான் • மழுங்க னாகவா

*** வேறு நயங்கள் இருப்பின் அவற்றையும் கவனத்தில் கொள்ளவும்.**

தாக்கம்

1. இந்தியர்கள் தாம் சஞ்சிக்கூலி என்று தங்களை அடையாளப்படுத்தி அடிமைப்பட்டு வாழ்வது வருத்தமளிக்கிறது.

2. உழைக்கத் தெரிந்தும் பிழைக்கத் தெரியாததால் இந்தியர்களின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை என்ற உண்மை வேதனை அளிக்கிறது.

3. வரவுக்கு ஏற்பச் செலவு செய்து சிக்கனமாக வாழ வேண்டியதன் அவசியத்தை உணராதிருப்பது ஏமாற்றம் அளிக்கிறது.

படிப்பினை

1. இந்தியர்களிடம் சேமிப்புப் பழக்கம் கட்டாயம் இருத்தல் அவசியம்.

2. இந்தியர்கள் முன்னேற சிந்தனை மாற்றம் தேவை.

3. இந்தியர்கள் தங்களின் அறியாமையைப் போக்கிக் கொள்ளுதல் அவசியம்.

4. இந்தியர்கள் உழைப்புக்கேற்ற பலனைப் பெறுவதில் முனைப்புக் காட்ட வேண்டும்.

*** வேறு ஏற்புடைய தாக்கம் மற்றும் படிப்பினையையும் ஏற்றுக்கொள்ளலாம்.**

2.4	ஞான வழி

கவிஞர் பின்னணி	**இயற்பெயர்:**	கெ.சுப்பிரமணியம்
	புனைபெயர்:	பொன்முடி
	பிறப்பு:	27.11.1939 (மலேசியா)
	கல்வி/தொழில்:	• ஆசிரியர் தொழில் பயிற்சி • ஆசிரியர் / தலைமையாசிரியர்
	விருது/பரிசு:	• குழந்தை எழுத்தாளர் – தமிழ் இலக்கிக் கழகத்தினர் • தங்கப் பதக்கம்(1999) - மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் • பொற்பதக்கம் (2000) - கவிதை மாநாடு • இலக்கியத்துறைப் பரிசுகள்
	ஈடுபட்ட துறை:	• மரபுக்கவிதை • இசைப்பாடல் • கட்டுரை • உரைவீச்சு • இலக்கண இலக்கிய ஆய்வுகள் • இதழியல் • இலக்கிய உரைகள் • சமய உரைகள்
கவிஞர் படைப்பு	**வகைகள்:**	• சிறுவர் பாட்டு நூல்கள் - பறவைக் கப்பல் (1984) • கவிதைத்தொகுப்பு - பொன்முடி கவிதைகள் (1994) • கட்டுரைத் தொகுப்பு - மொழிச் செல்வம் • பயிற்சி நூல்கள் - 5ம், 6ம் படிவ இலக்கியப் பாடம்
	கொள்கை:	கல்வி வளர்ச்சி
	கருப்பொருள்:	பல்வகைக் கருப்பொருள்களைத் தம்முடைய படைப்புகளில் கையாண்டுள்ளார்.

ஞான வழி

ஈனவழிச் சென்றே நாளும்
இயல்பிலாச் செயல்க ளாற்றிப்
போனவழி நெறியென் கின்றாய்;
பொய்க்கு, மெய் வண்ணம் பூசி
ஊனவிழிக் குயர்வு சேர்ப்பாய்;
உனக்கொன்று சொல்வேன், நல்லோர்
ஞானவழி நிற்பாய், நெஞ்சே
நல்லுப தேசம் இஃதே!

குணம்விட்டுக் குறிகள் கெட்டுக்
குவலயம் தன்னில் ஆன்றோர்
இனம்விட்டுச் சிறுமை செய்,தீ
இயல்பினர் தம்மை நாடிப்
பணங்கண்டு பல்லி ளிக்கும்
பாங்கினைப் பெற்றாய், அன்பால்
உனக்கொன்று சொல்வேன், நெஞ்சே
உயர்ஞான நெறிநிற் பாயே!

உற்றுற்றுப் பார்க்கின் றாயே,
உன்னைத்தான் மனமே கேளாய்!
எற்றுப்பட் டுழன்று வாழ்வில்
ஏதப்பட் டழிகின் றாய், நீ
பற்றற்று வாழ்வார் வாழ்வின்
பளுவற்றுத் திகழ்வார்; அந்த
வெற்றிக்கு வித்தாம் ஞான
விளக்கினைப் பற்று வாயே!

- **கவிஞர் பொன்முடி**

பாடுபொருள்:	அறிவு
மையக்கரு:	உயர்ந்தோர் வழி நிற்றல்

சொற்பொருள் விளக்கம்		
ஈனவழி	-	இழிவான பாதையில்
ஊனவிழி	-	தவறான கண்ணோட்டம்
ஞானவழி	-	அறிவின் உயரியநிலை காட்டும் பாதை
குறிகள் கெட்டு	-	இலக்கின்றி
குவலயம்	-	பூமி
எற்றுப்பட் டுழன்று	-	முட்டிமோதி அலைதல்
ஏதப்பட்டு	-	துன்பம் / இன்னல்பட்டு
ஞானவிளக்கு	-	அனைத்தும் அறிந்த நிலை

தெரிநிலைக் கருத்துகள்

கண்ணி 1
இழிவான வழியைப் பின்பற்றி, நல்லொழுக்கமற்ற காரியங்களில் ஈடுபட்டு, அதைச் சரியான பாதை என்றுரைக்கிறாய். பொய்யை மெய்யாக்கி, உண்மையை உணராமல் தவறான கண்ணோட்டத்திற்கு வலு சேர்க்கின்றாய். மனமே, உனக்கு நான் சொல்லும் அறிவுரை யாதெனில் நல்லவர்கள் காட்டும் உயரிய வழியில் நடப்பாயாக.

கண்ணி 2
நல்ல குணங்களை இழந்து, இலக்கின்றி, உலகில் உள்ள ஆன்றோர்களின் வழியிலிருந்து விலகி, தகாத காரியங்களைச் செய்யும், தீயவர்களோடு இணங்கி, செல்வமுடையவர்களைக் கண்டு அவர்களோடு சிரித்துப் பழகி வருகிறாய். மனமே, அன்பு மிகுதியால் உனக்குக் கூறும் அறிவுரை யாதெனில், எதனையும் அறிவால் உணர்ந்து செயல்படும் மிக உயரிய வழியில் நடப்பாயாக.

கண்ணி 3
எதையும் ஆழ்ந்து நோக்கும் தன்மை கொண்ட மனமே, உனக்கு ஒன்று சொல்கிறேன் கேள். வாழ்க்கையில் முட்டிமோதி அலைந்து துன்புற்று அழிகின்றாய். உலக ஆசையைத் துறந்தவர்கள் துன்பமின்றி வாழ்வர். அந்த நிலைக்கு வழிகாட்டும் அறிவு நெறியைப் பின்பற்றுவாயாக.

புதைநிலைக் கருத்துகள்

1. ஞானவழி நின்ற சான்றோர்களின் ஒழுக்க நெறியைப் பின்பற்றி வாழ வேண்டும்.
2. அறியாமை நீங்கி வாழ வேண்டும்.
3. தீய காரியங்களில் ஈடுபடுவதை நிறுத்த வேண்டும்.
4. பேராசைகொண்டு வாழக்கூடாது.

**** வேறு ஏற்புடைய தெரிநிலை, புதைநிலைக் கருத்துகள் இருப்பின் அவற்றையும் ஏற்றுக் கொள்ளலாம்.***

நயங்கள்			
1.	**ஓசை நயம்**		
	1.1	**எதுகை**	
		கண்ணி 1 ஈ**ன**வழிச் - போ**ன**வழி ஊ**ன**விழிக் - ஞா**ன**வழி **கண்ணி 2** கு**ண**ம்விட்டுக் - இ**ன**ம்விட்டுச் ப**ண**ங்கண்டு - உ**ன**க்கொன்று	**கண்ணி 3** உ**ற்**றுற்றுப் - எ**ற்**றுப்பட் ப**ற்**றற்று - வெ**ற்**றிக்கு
	1.2	**மோனை**	
		கண்ணி 1 **ஈ**னவழிச் - **இ**யல்பிலாச் **போ**னவழி - **பொ**ய்க்கு **ஊ**னவிழிக் - **உ**னக்கொன்று **ஞா**னவழி - **ந**ல்லுப **கண்ணி 2** **கு**ணம்விட்டுக் - **கு**வலயம் **இ**னம்விட்டுச்- **இ**யல்பினர் **ப**ணங்கண்டு - **பா**ங்கினைப் **உ**னக்கொன்று - **உ**யர்ஞான	**கண்ணி 3** **உ**ற்றுற்றுப் - **உ**ன்னைத்தான் **எ**ற்றுப்பட் - **ஏ**தப்பட் **ப**ற்றற்று - **ப**ளுவற்றுத் **வெ**ற்றிக்கு - **வி**ளக்கினைப்
	1.3	**சந்தம்**	
		கண்ணி 1 போனவழி – ஞானவழி **கண்ணி 2** குணம்விட்டு – இனம்விட்டு	
	1.4	**முரண் தொடை**	
		ஈனவழி – ஞானவழி பொய் – மெய்	

2.	**அணி நயம்**	
	2.1	**உருவக அணி**
		- ஞான விளக்கு - அனைத்தும் அறிந்த நிலை
	2.2	**திரிபு அணி**
		போனவழி – ஞானவழி
	2.3	**தன்மை நவிற்சி அணி**
		உற்றுற்றுப் பார்க்கின் றாயே, உன்னைத்தான் மனமே கேளாய்!
3.	**பொருள் நயம்**	
	3.1	**தெரிபொருள்**
		இன்பங்களை அனுபவிக்க நல்லோரையும் நல்லுரைகளையும் புறந்தள்ளும் மனம் இறுதியில் துன்பத்தை அனுபவிக்கிறது என்று நயமாகக் கவிஞர் கூறுகின்றார்.
	3.2	**புதைபொருள்**
		சான்றோரின் ஒழுக்க நெறிகளைப் பற்றுக்கோடாகக் கொண்டு மனத்தைக் கட்டுப்படுத்தி வாழ்வது நலம் பயக்கும் என்பதை நயமாக எடுத்துரைக்கின்றார்.
4.	**சொல்நயம்**	
		• ஈனவழி • மெய் வண்ணம் பூசி • ஊனவிழி • ஞானவழி • குறிகள் கெட்டு • பல்லி ளிக்கும் • ஞானநெறி • எற்றுப்பட் டுழன்று • ஏதப்பட்டழிகின்றாய் • ஞானவிளக்கு • பளுவற்று

**** வேறு நயங்கள் இருப்பின் அவற்றையும் கவனத்தில் கொள்ளவும்.***

தாக்கம்

1. இழிவான வழியில் பல அறமில்லா செயல்களைச் செய்து வாழும் மக்களைக் கண்டு மனம் வருந்துகிறேன்.

2. தீய செயல்களைச் செய்யும் செல்வந்தர்களை நாடிப் பிழைக்கும் மனிதர்களின் போக்கு வேதனை அளிக்கிறது.

3. பற்றற்று வாழும் உயர்ந்த மனிதர்களைக் கண்டு பெருமை கொள்கிறேன்.

படிப்பினை

1. சான்றோர்கள் காட்டும் நல்வழியில் நடத்தல் அவசியம்.

2. பற்று நீங்கினால் நிம்மதியாக வாழலாம்.

3. ஞான வழியைப் பின்பற்றி நடந்தால், வாழ்வு முழுமை பெறும்.

* ***வேறு ஏற்புடைய தாக்கம் மற்றும் படிப்பினையையும் ஏற்றுக்கொள்ளலாம்.***

2.5	காலை அழகு

கவிஞர் பின்னணி	**இயற்பெயர்:**	தி. அரங்கசாமி என்ற எத்திராசலு
	புனைபெயர்:	வாணிதாசன், ரமி, பாவலர் மணி, தமிழ்நாட்டுத் தாகூர், புதுமைக் கவிஞர்
	பிறப்பு:	22.7.1915 – வில்லியனூர், புதுவை (இந்தியா)
	மறைவு:	7.8.1974
	கல்வி/தொழில்:	34 ஆண்டு ஆசிரியப் பணி
	அடை:	கவிஞரேறு
	விருது/பரிசு:	• பாவலர் மன்னன் • வித்வான் பட்டம்
	ஈடுபட்ட துறை:	• மரபுக்கவிதை • இலக்கண இலக்கிய ஆய்வுகள்
கவிஞர் படைப்பு	**வகைகள்:**	• சிறுகாப்பியம் (தமிழச்சி, கொடிமுல்லை) • குழந்தை இலக்கியம் (தொடுவானம், எழிலோவியம்) • கவிதைத் தொகுப்பு (வாணிதாசன்)
	கொள்கை:	இயற்கை ஈடுபாடு
	கருப்பொருள்:	பல்வகைக் கருப்பொருள்களைத் தம்முடைய படைப்புகளில் கையாண்டுள்ளார்.

காலை அழகு

வெள்ளி முளைப்பினிலே – அழகு
துள்ளுது வான்பரப்பில்! – சிறு
புள்ளின ஓசையிலே – அழகு
பொங்கி வழியுதடி!

காலைப் பிறப்பினிலே – அழகு
கண்ணைக் கவருதடி! – சிறு
சோலைக் கலகலப்பில் – அழகு
சொரியுது உள்ளத்திலே!

சேவல் அழைப்பினிலே – அழகு
சிந்தையை அள்ளுதடி! – மன
ஆவல் அழித்துவிட்டால் – அழ
கானது நம்முடைமை!

தாமரை மொட்டுக்குள்ளே – அழகு
தங்கிக் கிடக்குதடி! – கதிர்
சாமரை வீச்சினிலே – விரிந்து
சஞ்சலம் போக்குதடி!

வீடு துலக்கும்பெண்கள் – குளிர்முகம்
வீசும் ஒளியழகில் – வான்
நாடு விட்டுநகரும் – முழுமதி
நாணி முகம்வெளுத்தே!

- **கவிஞர் வாணிதாசன்**

பாடுபொருள்:	இயற்கை
மையக்கரு:	காலைப் பொழுதின் அழகு

சொற்பொருள் விளக்கம்		
வெள்ளி முளைப்பினிலே	-	பொழுது விடியும் வேளையிலே வெள்ளி (சுக்கிரன்) தென்படுதல்
புள்ளின ஓசையிலே	-	பறவைகள் எழுப்பும் ஒலியினிலே
சொரியுது	-	பொழியுது
கதிர் சாமரை வீச்சினிலே	-	சூரிய ஒளிக்கதிர்கள் படர்கையிலே
சஞ்சலம் போக்குதடி	-	மனக்கலக்கம் / மனக்கவலை நீக்குதடி
துலக்கும்	-	சுத்தம் செய்யும்
நாணி	-	வெட்கப்பட்டு

தெரிநிலைக் கருத்துகள்

கண்ணி 1
பொழுது விடியும் வேளையில் சுக்கிரனின் (வெள்ளி) ஒளியுடன் வானம் அழகாக காட்சியளிக்கின்றது. பறவைகள் எழுப்பும் ஒலி காலை அழகுக்கு மெருகூட்டுகிறது.

கண்ணி 2
காலை நேர இயற்கைக் காட்சிகள் கண்களுக்கு விருந்தாக உள்ளன. விடியலினால் சோலையில் ஏற்படும் ஆரவாரங்கள் மனத்திற்கு இன்பத்தைச் சேர்க்கின்றது.

கண்ணி 3
சேவல் கூவும் அழகு எண்ணத்தை ஈர்க்கின்றது. இயற்கையை விருப்பு வெறுப்பு இன்றி அணுகினால் வாழ்க்கை இன்பமாக இருக்கும்.

கண்ணி 4
தாமரை மொட்டின் உள்ளே அழகு மறைந்திருக்கிறது. சூரிய ஒளிபட்டுத் தாமரை மொட்டுகள் மலரும்போது அதன் அழகு வெளிப்பட்டு மனக்கலக்கத்தைப் போக்குகிறது.

கண்ணி 5
காலையில் வீட்டைச் சுத்தம் செய்யும் பெண்களின் முகங்கள் பொலிவாகக் காணப்படுகின்றன. அம்முகங்களைக் கண்டு வானில் உலவும் நிலவும் கூட வெட்கப்பட்டு மறைகிறது.

புதைநிலைக் கருத்துகள்

1. இயற்கையைப் போற்றுவோம்.
2. இயற்கையை இரசிக்க வேண்டும்.
3. மனிதர்கள் பேராசையை நீக்கினால் இயற்கை அழிவைத் தவிர்க்கலாம்.
4. பெண்கள் வீட்டுக் கடமைகளை இன்முகத்துடன் செய்வர்.
5. இயற்கையோடு இயைந்து வாழ வேண்டும்.

**** வேறு ஏற்புடைய தெரிநிலை, புதைநிலைக் கருத்துகள் இருப்பின் அவற்றையும் ஏற்றுக் கொள்ளலாம்.***

நயங்கள்			
1.	**ஓசை நயம்**		
	1.1	**எதுகை**	
		கண்ணி 1 வெ**ள்**ளி - பு**ள்**ளின **கண்ணி 2** கா**லைப்** - சோ**லைப்** **கண்ணி 3** சே**வல்** - ஆ**வல்**	**கண்ணி 4** தா**ம**ரை - சா**ம**ரை **கண்ணி 5** வீ**டு** - நா**டு**
	1.2	**மோனை**	
		கண்ணி 1 **பு**ள்ளின - **பொ**ங்கி **கண்ணி 2** **கா**லைப் - **க**ண்ணைக் **சோ**லை - **சொ**ரியுது **கண்ணி 3** **சே**வல் – **சி**ந்தையில் **ஆ**வல் – **கா**னது	**கண்ணி 4** **தா**மரை - **த**ங்கி **சா**மரை - **ச**ஞ்சலம் **கண்ணி 5** **வீ**டு - **வீ**சும் **நா**டு - **நா**ணி
	1.3	**சந்தம்**	
		கண்ணி 2 காலை - சோலை **கண்ணி 3** சேவல் - ஆவல்	**கண்ணி 4** தாமரை - சாமரை **கண்ணி 5** வீடு – நாடு
	1.4	**இயைபு**	
		கண்ணி 1 அழகு- அழகு	**கண்ணி 4** கிடக்குதடி – போக்குதடி

2.	**அணி நயம்**	
	2.1	**உருவக அணி**
		• வான் நாடு – வானம் நாடாக • சாமரை வீச்சினிலே – சூரிய ஒளிக்கதிர்
	2.2	**பின்வருநிலை அணி**
		• அழகு – அழகு
	2.3	**திரிபு அணி**
		• சேவல் – ஆவல் • தாமரை – சாமரை • வீடு – நாடு
	2.4	**தற்குறிப்பேற்ற அணி**
		• முழுமதி நாணி முகம்வெளுத்தே • சேவல் அழைப்பினிலே • கதிர் சாமரை வீச்சினிலே
	2.5	**தன்மை நவிற்சி அணி**
		தாமரை மொட்டுக்குள்ளே – அழகு தங்கிக் கிடக்குதடி
3.	**பொருள் நயம்**	
	3.1	தெரிபொருள்
		காலைப் பொழுதின் அழகு இரசித்து இன்புறத்தக்கது என நயமாகக் கவிஞர் கூறுகின்றார்.
	3.2	புதைபொருள்
		இயற்கையோடு இயைந்து அதனைப் போற்றி வாழ்வது அவசியம் என்பதைக் கவிஞர் நயமாக உணர்த்துகிறார்.

4.	**சொல்நயம்**	
		• வெள்ளி முளைப்பினிலே • துள்ளுது வான்பரப்பில் • புள்ளின ஓசையிலே • பொங்கி வழியுதடி • சோலைக் கலகலப்பில் • சொரியுது உள்ளத்திலே • சிந்தையை அள்ளுதடி • அழகு தங்கிக் கிடக்குதடி • சாமரை வீச்சினிலே • சஞ்சலம் போக்குதடி • குளிர்முகம் வீசும் ஒளியழகில் • வான் நாடுவிட்டு நகரும்

****   வேறு நயங்கள் இருப்பின் அவற்றையும் கவனத்தில் கொள்ளவும்.***

தாக்கம்

1. காலை அழகில் மனம் மயங்குகிறது.

2. இயற்கையைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற ஆவல் மேலிடுகிறது.

3. நாம் ஆசையைக் களைந்தால் காணும் அனைத்திலும் அழகைக் காணமுடியும் என்பதை உணர்கிறேன்.

4. இயற்கையை நேசிக்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது.

5. நமது பெண்களின் இல்லத்தைப் பராமரிக்கும் கடமையுணர்வு பெருமையளிக்கிறது.

படிப்பினை

1. இயற்கையை அதன் தன்மையிலேயே பார்த்தல் நன்று.

2. இயற்கையை நேசித்தல் அவசியம்.

3. இயற்கையை அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்வது நமது கடமை.

4. இயற்கை அழகு மன இறுக்கத்தைப் போக்க வல்லது.

****   வேறு ஏற்புடைய தாக்கம் மற்றும் படிப்பினையையும் ஏற்றுக்கொள்ளலாம்.***

2.6 சூரியன் வருவது யாராலே?

கவிஞர் பின்னணி	**இயற்பெயர்:**	வெ. இராமலிங்கம் பிள்ளை
	புனைபெயர்:	காந்தியக் கவிஞர்
	பிறப்பு:	19.10.1888 நாமக்கல் மாவட்டம்
	மறைவு:	24.8.1972
	கல்வி/தொழில்:	• நாமக்கல் ஆரம்பப்பள்ளி • 1909 பிஷப் ஹெபர் கல்லூரியில் பயின்றார் • எழுத்தாளர் • ஆசிரியர்
	அடை:	நாமக்கல்
	விருது/பரிசு:	• பத்ம பூஷண் (1971) • தமிழ் நாட்டின் முதல் அரசவைக் கவிஞர் பதவி
	ஈடுபட்ட துறை:	• எழுத்துத்துறை (கவிதை, நாவல், இலக்கியத் திறனாய்வு) • அரசியல்துறை (காங்கிரஸ் கட்சி உறுப்பினர், தமிழகச் சட்ட மேலவை உறுப்பினர், விடுதலைப் போராட்டம்) • பத்திரிகைத்துறை • கலைத்துறை (ஓவியம்)
கவிஞர் படைப்பு	**வகைகள்:**	• நாவல் (மலைக்கள்ளன்) • பாடல் (நாமக்கல்லார் பாடல்கள்)
	கொள்கை:	இறை நம்பிக்கை, நாட்டுப் பற்று
	கருப்பொருள்:	பல்வகைக் கருப்பொருள்களைத் தம்முடைய படைப்புகளில் கையாண்டுள்ளார்.

சூரியன் வருவது யாராலே?

சூரியன் வருவது யாராலே?
　　சந்திரன் திரிவதும் எவராலே?
காரிருள் வானில் மின்மினிபோல்
　　கண்ணிற் படுவன அவை என்ன?
பேரிடி மின்னல் எதனாலே?
　　பெருமழை பெய்வதும் எவராலே?
யாரிதற் கெல்லாம் அதிகாரி?
　　அதை நாம் எண்ணிட வேண்டாவோ?

தண்ணீர் விழுந்ததும் விதையின்றித்
　　தரையில் முளைத்திடும் புல்ஏது?
மண்ணில் போட்டது விதையொன்று
　　மரஞ்செடி யாவது யாராலே?
கண்ணில் தெரியாச் சிசுவைஎல்லாம்
　　கருவில் வளர்ப்பது யார்வேலை?
எண்ணிப் பார்த்தால் இதற்கெல்லாம்
　　ஏதோ ஒருவிசை இருக்குமன்றோ?

எத்தனை மிருகம்! எத்தனைமீன்!
　　எத்தனை ஊர்வன பறப்பனபார்!
எத்தனை பூச்சிகள் புழுவகைகள்!
　　எண்ணத் தொலையாச் செடிகொடிகள்!
எத்தனை நிறங்கள் உருவங்கள்!
　　எல்லா வற்றையும் எண்ணுங்கால்
அத்தனை யும்தர ஒருகர்த்தன்
　　யாரோ எங்கோ இருப்பதுமெய்.

அல்லா வென்பார் சிலபேர்கள்;
　　அரன்அரி யென்பார் சிலபேர்கள்;
வல்லான் அவன்பர மண்டலத்தில்
　　வாழும் தந்தை யென்பார்கள்;
சொல்லால் விளங்கா ‘நிர்வாணம்’
　　என்றும் சிலபேர் சொல்வார்கள்;
எல்லா மிப்படிப் பலபேசும்
　　ஏதோ ஒருபொருள் இருக்கிறதே!

அந்தப் பொருளை நாம்நினைத்தே
　　அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம்
எந்தப் படியாய் எவர் அதனை
　　எப்படித் தொழுதால் நமக்கென்ன?
நிந்தை பிறரைப் பேசாமல்
　　நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப் போம் அதை வணங்கிடுவோம்;
　　வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்.

- கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

பாடுபொருள்:	இறை நம்பிக்கை
மையக்கரு:	இறை ஆற்றலைப் போற்றுவோம்

சொற்பொருள் விளக்கம்		
காரிருள் வானில்	-	மிகுந்த இருள் சூழ்ந்த வானத்தில்
ஒரு விசை	-	ஒன்றை இயக்குவதற்கான சக்தி
ஒரு கர்த்தன்	-	படைத்தவன்
அரன் அரி	-	சிவன் திருமால்
வல்லான்	-	இறைவன்
நிர்வாணம்	-	மோட்சம் (சமணரும் பௌத்தரும் கூறும் முக்தி நிலை)
நிந்தை	-	இழிவாக
வந்திப்போம்	-	பணிந்திடுவோம்

தெரிநிலைக் கருத்துகள்

கண்ணி 1
சூரியன் யாரால் உதயமாகின்றது? சந்திரனும் யாரால் வானவீதியில் சுற்றித் திரிகிறது? இருண்ட வானத்தில் மின்மினிப் பூச்சிகள் போல் கண்களில் பட்டு ஒளிர்கின்றனவே அவை யாவை? பேரிடி, மின்னல் மற்றும் பெருமழையும் பொழிவது எவராலே? இந்த இயக்கத்திற்கெல்லாம் யார் காரணம் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா?

கண்ணி 2
தண்ணீர் பூமியில் விழுந்ததும் விதையேதுமின்றிப் புல் எப்படி தரையில் முளைத்திடும்? மண்ணில் போட்ட விதை மரமாகவும் செடியாகவும் வளர்ந்து நிற்பது யாராலே? தாயின் கருவறையில் இருக்கும் குழந்தையின் அவயங்கள் அழகுபட முழுமையாக வளர்ச்சி பெறச் செய்வது யாருடைய வேலை? இதையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது ஏதோ ஓர் ஆற்றல் இருக்குமல்லவா?

கண்ணி 3
பல வகையான மிருகங்கள், மீனினங்கள், ஊர்வன, பறப்பன, பூச்சிகள், புழு வகைகள் இருக்கின்றன. இன்னும் எண்ணிலடங்கா வகையிலான செடி கொடிகள் உள்ளன. அவை பல தோற்றங்களிலும் வண்ணங்களிலும் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்கும்போது இவை யாவற்றையும் படைக்கின்ற ஒருவன் இருப்பது உண்மையாகிறது.

கண்ணி 4
அந்தப் படைப்பாளனை ஒவ்வொரு சமயத்தினரும் வெவ்வேறு பெயரிட்டு அழைக்கின்றனர். சிலர் அல்லாவென்றும் சிலர் சிவனென்றும் சிலர் திருமால் என்றும் மேலும் சிலரோ பரமண்டலத்தில் இருக்கும் பரமபிதா என்றும் பெயரிட்டு அழைக்கின்றனர். சிலர், சொல்லால் விளக்க முடியாத உயர்ந்த நிலையிலான மோட்சத்தை (நிர்வாணம்) அடையவேண்டும் என்பர். இப்படிப் பல்வேறு விதமாகக் கூறுவதற்குக் காரணமான ஒரு பொருள் இருக்கிறதே.

கண்ணி 5
அந்தச் சக்தியை நினைத்து நாம் அனைவரும் அன்பாய்ப் பழகிடுவோம். இறைவனை எவர் எந்த முறையில் வணங்கினால் நமக்கென்ன? ஆகவே, அடுத்தவரையும் அவர்தம் வழிபாட்டு முறையையும் இழித்துப் பேசாமல் எந்த நிலையிலும் அவர்களுக்குக் கெடுதல் செய்யாமல் வாழ்வோம். அந்தப் பரம்பொருளை வணங்கி சுகமாய் இம்மண்ணில் வாழ்ந்திடுவோம்.

புதைநிலைக் கருத்துகள்

1. இறைவன் அனைவருக்கும் ஒன்றே என்பது உணர்த்தப்படுகிறது.
2. நம்மை மீறிய சக்தி ஒன்று உள்ளது என்பதை உணரவேண்டும்.
3. உலகத்தின் இயக்கத்திற்குக் காரணமாய் இருக்கும் அச்சக்தியை மதிப்போம்.
4. அனைத்தையும் படைத்தவன் இறைவன் என்பதை உணரவேண்டும்.
5. யாருக்கும் தீங்கு செய்யாமல் அனைவரையும் மதித்து வாழ வேண்டும்.
6. இறைவனை வணங்குவோம்.
7. அனைத்து உயிர்களையும் நேசிக்க வேண்டும்.

**** வேறு ஏற்புடைய தெரிநிலை, புதைநிலைக் கருத்துகள் இருப்பின் அவற்றையும் ஏற்றுக் கொள்ளலாம்.***

நயங்கள்			
1.	**ஓசை நயம்**		
	1.1	**எதுகை**	
		கண்ணி 1 சூ**ரி**யன் – கா**ரி**ருள் பே**ரி**டி – யா**ரி**தற் **கண்ணி 2** த**ண்**ணீர் – ம**ண்**ணில் க**ண்**ணில் – எ**ண்**ணிப் **கண்ணி 3** எ**த்**தனை – எ**த்**தனை எ**த்**தனை – அ**த்**தனை	**கண்ணி 4** அ**ல்**லா – வ**ல்**லான் சொ**ல்**லால் – எ**ல்**லா **கண்ணி 5** அ**ந்**தப் – எ**ந்**தப் நி**ந்**தை – வ**ந்**திப்
	1.2	**மோனை**	
		கண்ணி 1 **கா**ரிருள் – **க**ண்ணிற் **பே**ரிடி – **பெ**ருமழை **கண்ணி 2** **த**ண்ணீர் – **த**ரையில் **ம**ண்ணில் – **ம**ரஞ்செடி **க**ண்ணில் – **க**ருவில் **எ**ண்ணிப் – **ஏ**தோ **கண்ணி 3** **எ**த்தனை – **எ**த்தனை **எ**த்தனை – **எ**ண்ணத் **எ**த்தனை – **எ**ல்லா	**கண்ணி 4** **அ**ல்லா – **அ**ரன்அரி **வ**ல்லான் – **வா**ழும் **எ**ல்லா – **ஏ**தோ **கண்ணி 5** **அ**ந்தப் – **அ**னைவரும் **எ**ந்தப் – **எ**ப்படித் **நி**ந்தை – **நி**னைவிலும் **வ**ந்திப்போம் – **வா**ழ்வோம்
	1.3	**சந்தம்**	
		கண்ணி 1 எதனாலே - எவராலே **கண்ணி 2** மண்ணில் – கண்ணில்	**கண்ணி 3** எத்தனை – அத்தனை **கண்ணி 5** அந்த – எந்த

	1.4	**இயைபு**	
		கண்ணி 1 யாராலே – எவராலே எதனாலே – எவராலே **கண்ணி 3** புழுவகைகள் - செடிகொடிகள் – உருவங்கள்	**கண்ணி 4** சிலபேர்கள் – சிலபேர்கள் யென்பார்கள் – சொல்வார்கள் **கண்ணி 5** வணங்கிடுவோம் – வாழ்ந்திடுவோம்
	1.5	**முரண் தொடை**	
		ஊர்வன - பறப்பன	
2.	**அணி நயம்**		
	2.1	**உவமை அணி**	
		• மின்மினிபோல்	
	2.2	**உருவக அணி**	
		• ஒருவிசை – ஆற்றல் • அதிகாரி – இயக்குபவன்	
	2.3	**பின்வருநிலை அணி**	
		• எவராலே – எவராலே • எத்தனை – எத்தனை • சிலபேர்கள் – சிலபேர்கள்	
	2.4	**திரிபு அணி**	
		• மண்ணில் – கண்ணில் • எத்தனை – அத்தனை • அந்த – எந்த	
	2.5	**தன்மை நவிற்சி அணி**	
		மண்ணில் போட்டது விதையொன்று மரஞ்செடி யாவது யாராலே?	

3.	**பொருள் நயம்**	
	3.1	**தெரிபொருள்**
		பிரபஞ்ச இயக்கத்திற்கு இறையாற்றலே காரணம் என்பதை உணர்ந்து அனைவருடனும் அன்போடு வாழ வேண்டும் என்பதை நயமாகக் கவிஞர் உரைக்கின்றார்.
	3.2	**புதைபொருள்**
		இறைவழிபாடு பல வழிகளில் இருந்தாலும் இறைவனால் படைக்கப்பட்ட நாம் யாவரும் சமமே. ஆகவே, அதனை உணர்ந்து அன்பு நெறியோடு வாழ்வது சிறப்பெனக் கவிஞர் நயமாக எடுத்துரைக்கின்றார்.
4.	**சொல்நயம்**	
		• மின்மினிபோல் • அதிகாரி • கண்ணில் தெரியாச் சிசுவை • ஏதோ ஒருவிசை • எண்ணத் தொலையா • ஒருகர்த்தன் • வல்லான் • குலவிடுவோம் • வந்திப்போம்

****   வேறு நயங்கள் இருப்பின் அவற்றையும் கவனத்தில் கொள்ளவும்.***

தாக்கம்

1. உலகத்தில் இருக்கும் அத்தனையும் இறை சக்தியால்தான் இயங்குகின்றது என்பதை உணர்ந்தேன்.
2. பிற மதங்களையும் மதித்து நடத்தல் அவசியம் என்ற உணர்வு ஏற்பட்டது.
3. எல்லாப் படைப்பிற்கும் இறைவனே காரணம் என்பதை உணர்கிறேன்.
4. மனிதநேயத்தைப் போற்றி வாழ வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது.
5. இறையாற்றலின் மீது நன்றி உணர்வு மேலிடுகிறது.

படிப்பினை

1. இயற்கையைப் போற்றி மதிக்க வேண்டும்.
2. இயற்கையை இயக்கும் அந்த மாபெரும் சக்தியைப் போற்ற வேண்டும்.
3. பிற சமயங்களை / நம்பிக்கையைத் தூற்றக் கூடாது.
4. யாருக்கும் கெடுதல் செய்யக்கூடாது.
5. அனைவரிடமும் அன்பாய்ப் பழகிட வேண்டும்.

* ***வேறு ஏற்புடைய தாக்கம் மற்றும் படிப்பினையையும் ஏற்றுக்கொள்ளலாம்.***

2.7	மடமை மூடிய இருட்டு

கவிஞர் பின்னணி	**இயற்பெயர்:**	அ. கல்யாணசுந்தரம்
	புனைபெயர்:	பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
	பிறப்பு:	13.4.1930 (பட்டுக்கோட்டை, தமிழ்நாடு)
	மறைவு:	8.10.1959
	கல்வி/தொழில்:	• பள்ளிப் படிப்பு • பாடலாசிரியர்
	அடை:	பட்டுக்கோட்டை
	விருது/பரிசு:	• 1981 (பாவேந்தர் விருது) • 2000 (மணிமண்டபம் கட்டப்பட்டது)
	ஈடுபட்ட துறை:	• நாடகக் கலையில் ஆர்வமும் விவசாய இயக்கத்தின்பால் பற்றும் கொண்டவர். • 17 வகைத் தொழில்களில் ஈடுபட்டவர். • இவர் பல இயக்கங்களிலும் பொதுவுடைமைக் கட்சியிலும் ஈடுபாடு கொண்டவர். • பல படங்களுக்குப் பாடல்கள் எழுதியுள்ளார்.
கவிஞர் படைப்பு	**வகைகள்:**	திரையிசைப் பாடல்கள்
	கொள்கை:	பொதுவுடைமை
	கருப்பொருள்:	பல்வகைக் கருப்பொருள்களைத் தம்முடைய படைப்புகளில் கையாண்டுள்ளார்.

மடமை மூடிய இருட்டு

குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும்
குருட்டு உலகமடா – இது
கொள்ளையடிப்பதில் வல்லமை காட்டும்
திருட்டு உலகமடா – தம்பி
    தெரிந்து நடந்து கொள்ளடா – இதயம்
    திருந்த மருந்து சொல்லடா (குறுக்கு)

இருக்கும் அறிவை மடமை மூடிய
இருட்டு உலகமடா – வாழ்வில்
எந்த நேரமும் சண்டை ஓயாத
முரட்டு உலகமடா – தம்பி
    தெரிந்து நடந்து கொள்ளடா – இதயம்
    திருந்த மருந்து சொல்லடா

விளையும் பயிரை வளரும் கொடியை
வேருடன் அறுத்து விளையாடும் – மனம்
வெந்திடும் தோட்டக்காரனிடம்
மிரட்டல் வார்த்தைகளாடும் – பல
வரட்டுக் கீதமும் பாடும் – விதவிதமான
பொய்களை வைத்துப்
புரட்டும் உலகமடா – தம்பி
    தெரிந்து நடந்து கொள்ளடா – இதயம்
    திருந்த மருந்து சொல்லடா

அன்பு படர்ந்த கொம்பினிலே ஒரு
அகந்தைக் குரங்கு தாவும் – அதன்
அழகைக் குலைக்க மேவும்
கொம்பு ஒடிந்து கொடியும் குலைந்து
குரங்கும் விழுந்து சாகும் – சிலர்
குணமும் இதுபோல் குறுகிப் போகும்
கிறுக்கு உலகமடா – தம்பி
    தெரிந்து நடந்து கொள்ளடா – இதயம்
    திருந்த மருந்து சொல்லடா

- **கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**

பாடுபொருள்:	அறியாமை
மையக்கரு:	சமுதாயத்தில் சிலரின் பண்பற்ற போக்கு

சொற்பொருள் விளக்கம்		
குருட்டு உலகமடா	-	கண்மூடித்தனம்
மடமை	-	அறிவின்மை
வெந்திடும்	-	துன்பப்படும்
வரட்டு கீதமும் பாடும்	-	போலியான கௌரவம்
புரட்டும்	-	ஏமாற்றும்
அகந்தை	-	ஆணவம்
மேவும்	-	படரும்
கொம்பு	-	கிளை
குறுகி	-	குறைந்து

தெரிநிலைக் கருத்துகள்

கண்ணி 1
முறையற்ற வழிகளைப் பயன்படுத்தி வாழ்க்கையை அமைத்துக் கொள்வதே இந்த உலகத்தாரின் கண்மூடித்தனமான போக்காக இருக்கிறது. பிறர் உழைப்பையும் பொருளையும் கொள்ளையடித்து வாழும் இப்போக்கு மக்களிடையே உள்ளதென்பதை அறிந்து கவனமுடன் செயல்பட வேண்டும். இதுபோன்ற செயல்களைத் தீர்க்க தகுந்த வழிகளையும் கண்டறியவேண்டும்.

கண்ணி 2
உன்னிடம் இருக்கும் அறிவை, அறியாமை என்ற மடமையானது சிந்திக்க விடாமல் செய்கின்றது. எதற்கெடுத்தாலும் முரண்பட்டுச் சண்டையிட்டுக் கொள்ளும் வன்முறையாளர்கள் வாழும் உலகம் என்பதை நாம் அறிந்து செயல்படவேண்டும். இவர்கள் மனம் திருந்தி வாழ்வதற்கு வழிகாட்ட வேண்டும்.

கண்ணி 3
தோட்டத்தில் விளையும் பயிரையும் கொடியையும் பாழ்படுத்தி மகிழ்ச்சியுறும் உலகம் இது. இதனால் மனம் வேதனைப்படும் தோட்டக்காரனை மிரட்டி அடக்கியாளுவதைப்போல பிறரின் வளர்ச்சியை வேரறுத்து அதைக் கொண்டாடும் உலகம் இது. இழப்பால் புண்பட்டவர்களையும் மிரட்டிப் பல பொய்களைச் சொல்லி ஏமாற்றும் இந்த மக்களிடையே கவனமாகச் செயல்படவேண்டும். இவர்கள் மனம் திருந்தி வாழ்வதற்கு வழிகாட்ட வேண்டும்.

கண்ணி 4

அன்பு கொண்ட உள்ளத்தை ஆணவம் எனும் குரங்கு பற்றிக் கொண்டால், அது நம் குணத்தைச் சீரழிக்கும். அதனால் அன்பிழக்கச் செய்து நம் வாழ்வையே அழிக்கும். இதுபோல மனிதர்கள் சிலரின் குணமும் ஆணவத்தால் சிறுமையுற்றுச் சுயசிந்தனையின்றிச் செயல்படும் என்பதை அறியவேண்டும். இவர்கள் மனம் திருந்தி வாழ்வதற்கு வழிகாட்ட வேண்டும்.

புதைநிலைக் கருத்துகள்

1. பிறரை ஏமாற்றி வாழக்கூடாது.
2. சுயசிந்தனையோடும் சுயமுற்சியோடும் வாழ வேண்டும்.
3. அறியாமை நீங்கி வாழவேண்டும்.
4. வன்முறையை ஒழிக்க வேண்டும்.
5. ஆணவம் கொள்ளக் கூடாது.
6. தெளிந்து செயல்பட வேண்டும்.

**** வேறு ஏற்புடைய தெரிநிலை, புதைநிலைக் கருத்துகள் இருப்பின் அவற்றையும் ஏற்றுக் கொள்ளலாம்.***

நயங்கள்			
1.	**ஓசை நயம்**		
	1.1	**மோனை**	
		கண்ணி 1 **கு**றுக்கு – **கு**ருட்டு **தெ**ரிந்து – **தி**ருந்த **கண்ணி 2** **இ**ருக்கும் – **இ**ருட்டு **தெ**ரிந்து – **தி**ருந்த	**கண்ணி 3** **வி**ளையும் – **வே**ருடன் **பொ**ய்களை – **பு**ரட்டும் **தெ**ரிந்து – **தி**ருந்த **வெ**ந்திடும் – **மி**ரட்டல் **கண்ணி 4** **அ**ன்பு – **அ**கந்தைக் **கொ**ம்பு – **கு**ரங்கும் **தெ**ரிந்து – **தி**ருந்த
	1.2	**சந்தம்**	
		கண்ணி 1 குறுக்கு - குருட்டு – திருட்டு கொள்ளடா – சொல்லடா நடந்து – மருந்து **கண்ணி 2** இருட்டு – முரட்டு கொள்ளடா – சொல்லடா நடந்து – மருந்து	**கண்ணி 3** கொள்ளடா – சொல்லடா நடந்து – மருந்து **கண்ணி 4** அன்பு – கொம்பு ஒடிந்து – விழுந்து தாவும் – மேவும் கொள்ளடா – சொல்லடா நடந்து – மருந்து
	1.3	**இயைபு**	
		கண்ணி 1 உலகமடா – உலகமடா கொள்ளடா – சொல்லடா **கண்ணி 2** உலகமடா – உலகமடா கொள்ளடா – சொல்லடா	**கண்ணி 3** விளையாடும் – வார்த்தைகளாடும் – பாடும் கொள்ளடா – சொல்லடா **கண்ணி 4** தாவும் – மேவும் – சாகும் கொள்ளடா – சொல்லடா
	1.4	**முரண் தொடை**	
		அறிவை – மடமை	

2.	**அணி நயம்**	
	2.1	**உருவக அணி**
		• மருந்து – வழிகாட்டல்/ தீர்வு • அன்பு படர்ந்த கொம்பினிலே – அன்பு கொண்ட உள்ளத்திலே • அகந்தைக் குரங்கு – ஆணவம் • கொம்பு ஒடிந்து – உள்ளம் நொந்து • கொடியும் குலைந்து – வாழ்க்கை சீரழிந்து
	2.2	**பின்வருநிலை அணி**
		• உலகமடா – உலகமடா
	2.3	**திரிபு அணி**
		• குருட்டு – திருட்டு • தாவும் – மேவும்
	2.4	**தன்மை நவிற்சி அணி**
		விளையும் பயிரை வளரும் கொடியை வேருடன் அறுத்து விளையாடும்
3.	**பொருள் நயம்**	
	3.1	**தெரிபொருள்**
		ஒரு சமூகத்தின் வளர்ச்சியின்மைக்கு அச்சமூகத்தில் நிலவிவரும் மடமைப் போக்கே காரணம் என்பதை இக்கவிதை எடுத்துரைக்கிறதுமடமை . சமூகத்தைச் சூழ்ந்து மக்களிடையே அறியாமை எனும் இருளை ஏற்படுத்தி வாழ்க்கையைச் சீரழிக்கிறது என்பதைநயமாகப் பாடுகிறார் கவிஞர் .
	3.2	**புதைபொருள்**
		அறவாழ்வுக்கு எதிரான பல தீய குணங்கள் இன்று சமூகத்தில் வழக்கமாகிவிட்டன. இதையே கவிஞர் மடமை என்று நயமாக எடுத்துரைக்கின்றார்.
4.	**சொல்நயம்**	
		• குருட்டு உலகம் • மருந்து சொல்லடா • மடமை • விளையும் பயிரை • வளரும் கொடியை • தோட்டக்காரன் • கொம்பினிலே • அகந்தைக் குரங்கு

* ***வேறு நயங்கள் இருப்பின் அவற்றையும் கவனத்தில் கொள்ளவும்.***

தாக்கம்

1. பிறரை ஏமாற்றி வாழக்கூடாது என்று உணர்ந்து கொண்டேன்.
2. நற்சிந்தனையோடு வாழ வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்பட்டது.
3. சண்டை சச்சரவுகளோடு வாழும் மனிதர்களைப் பார்க்கும்போது வேதனை அளிக்கிறது.
4. மற்றவர்களுக்கு நல்வழிகாட்ட வேண்டும் என்ற உணர்வு மேலோங்குகிறது.
5. எளியவர்களை வலியவர்கள் அச்சுறுத்தக்கூடாது என்றுணர்ந்தேன்.

படிப்பினை

1. பிறரை ஏமாற்றி வாழக்கூடாது.
2. நற்சிந்தனையோடு வாழும் வாழ்வே உயர்ந்தது.
3. சண்டைச் சச்சரவுகளைத் தவிர்த்தல் நலம்.
4. வாழ்க்கையில் முன்னேற விரும்புபவர்களைக் கைக்கொடுத்துத் தூக்கிவிட வேண்டும்.
5. எளியவர்களை ஆதரிக்க வேண்டும்.
6. உழைத்து வாழ வேண்டும்.

***** ***வேறு ஏற்புடைய தாக்கம் மற்றும் படிப்பினையையும் ஏற்றுக்கொள்ளலாம்.***

2.8	**வாழ்க்கையே ஒரு திருவிழா**

கவிஞர் பின்னணி	**இயற்பெயர்:**	த. கோவேந்தன்
	பிறப்பு:	21.06.1932 – வேலூர், தமிழ்நாடு
	கல்வி/தொழில்:	• மதுரை தமிழ்ச் சங்கத் தேர்வு • முழு நேர இலக்கியப் பணி
	விருது/பரிசு:	• 1965 – தமிழ்ப்பா நிலவு • 1967 – செந்தமிழ்ச் செல்வம் • 1972 – சோவியத்து அரசு நேரு பரிசு • 1985 – பாரதிதாசன் விருது • 2001 – கம்பன் கழக விருது
	ஈடுபட்ட துறை:	• கதை • மொழிபெயர்ப்பு • கவிதை (மரபும் புதுக்கவிதையும்)
கவிஞர் படைப்பு	**வகைகள்:**	• கவிதை (அமிழ்தின் ஊற்று, 100க்கும் அதிகமான கவிதைகள்) • கட்டுரை (அன்பு வெள்ளம், அறிவியல் நோக்கில் காலமும் கடிகாரமும், கட்டுரை நூல்கள்) • கட்டுரை • உரை (சங்கப் பாடல் உரை) • மொழிபெயர்ப்பு (நூல்கள்)
	கொள்கை:	சமுதாயம்
	கருப்பொருள்:	பல்வகைக் கருப்பொருள்களைத் தம்முடைய படைப்புகளில் கையாண்டுள்ளார்.

வாழ்க்கையே ஒரு திருவிழா

வாழ்க்கை யேஒரு திருவிழா
    வந்துள் ளோம்கொண் டாடவே
ஆழ்ந்துள் ளோம் அன் பிணைப்பினில்
    அனைத்துயி ரிலும்நாம் வாழுவோம்!

காலை எழுந்ததும் உன் அன்பினில்,
    காரணம் இலாத மகிழ்ச்சியில்
சாலையில் நீர்தெ ளிக்கையில்
    தழுவும் நம்மனம் களிப்பினில்!

நம்மைச் சுற்றிலும் அழகொளி
    ஞாயிறு ஒண்கதிர் நேருறச்
செம்மை அன்பையே பொழிந்திடும்
    சேர்ந்து வந்திடும் ஊரெலாம்!

வியப்புற மக்கள் இயக்கமும்
    வேறு வேறொலிப் புட்களின்
தயக்கம் ஒன்றிலாப் பல்லிசை
    தழுவச் செய்திடும் வாழியே!

நாள்பொழு தெலாம்உன் அன்பொலி
    நல்வழிக்கு என்னை அழைத்திடும்
நாள்பொழு தெலாம்உன் அன்புளம்
    நம்பிக் கையின்மகிழ் வூட்டிடும்!

நாள்பொழு தெலாம்அன் புறவுதான்
    நலமும் வலுவும் தந்திடும்;
நாள்பொழு தெலாம்உன் அன்புயிர்
    கணந்தொறும் வாழ உதவுமே!

- **த. கோவேந்தன்**

பாடுபொருள்:	வாழ்க்கை
மையக்கரு:	அன்பு

சொற்பொருள் விளக்கம்		
ஆழ்ந்துள்ளோம்	-	திளைத்துள்ளோம்
ஒண்கதிர்	-	ஒளிவீசும்
நேருறச்	-	நேராக
புட்களின்	-	பறவைகள்
அன்பொலி	-	அன்புமொழி
அன்புறவு	-	நெருக்கமான உறவு
கணந்தொறும்	-	ஒவ்வொரு நொடியும்
பல்லிசை	-	பலவகையான ஓசை

தெரிநிலைக் கருத்துகள்

கண்ணி 1
மனித வாழ்க்கையே திருவிழா போன்றது. அதை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்காகவே நாம் பிறந்துள்ளோம். இந்த வாழ்க்கையில் நாம் ஆழ்ந்த அன்பின் பிணைப்பில் திளைத்தோமானால் அனைத்து உயிர்களுக்குள்ளும் நாம் வாழ முடியும்.

கண்ணி 2
நம் அன்பான வாழ்க்கையின் ஒவ்வொரு காலைப்பொழுதையும் மிக மகிழ்ச்சியோடு தொடங்கவேண்டும். அக்காலை வேளையில் கோலம் போடுவதற்காக எல்லோர் வீட்டின் முன் நீர் தெளிக்கும் போது நம் மனம் மகிழ்ச்சியில் திளைக்கின்றது.

கண்ணி 3
ஒவ்வொரு நாளும் நம் வாழ்க்கையில் தவறாமல் ஒளிவீசுகின்ற சூரியன் நம்மைச் சுற்றிலும் அழகான ஒளியைப் பரப்புகிறது. இச்செயலானது சூரியன் உலக உயிர்களின் மீது கொண்ட ஆழமான அன்பைக் காட்டுகின்றது.

கண்ணி 4
மனித வாழ்க்கையின் பல்வேறு செயல்பாடுகளும் பறவைகள் சுதந்திரமாக எழுப்பும் பல்வேறு ஓசைகளும் நம்மை வியக்க வைக்கின்றன. இவ்வோசைகள் இசையாய் நம் வாழ்க்கையை மணக்கச் செய்வதால் இவ்வாழ்க்கையை வாழ்த்துவோம்.

கண்ணி 5
ஒவ்வொரு நாளும் வாழ்க்கையில் நாம் கேட்கின்ற இனிமையான அன்புமொழி, நம்மை நல்ல வழிக்கு இட்டுச் செல்கிறது. அந்த அன்பே நமக்கு நம்பிக்கை ஊட்டி மகிழ்விக்கிறது.

கண்ணி 6
நாள் முழுவதும் கிடைக்கின்ற அன்பான உறவுதான் நமக்கு நலத்தையும் வலுவையும் கொடுக்கின்றது. இப்படிக் கிடைக்கின்ற இந்த அன்புதான் நாம் ஒவ்வொரு நொடியும் என்றும் மகிழ்வோடு வாழ்வதற்குத் துணைபுரிகிறது.

புதைநிலைக் கருத்துகள்

1. மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அன்பு மிக முக்கியம்.
2. அனைவரும் அன்பு பாராட்ட வேண்டும்.
3. அனைத்துக் காரியங்களையும் மிக அன்பாகவே செய்ய வேண்டும்.
4. அன்பு ஏற்படுத்தும் மகிழ்ச்சி நமக்கு உடல் நலத்தைத் தந்திடும்.
5. அன்பான உறவுகளை நாம் போற்ற வேண்டும்.
6. அன்பென்ற உணர்வு இருந்தால் மட்டுமே வாழ்க்கையை இரசித்து வாழ முடியும்.

**** வேறு ஏற்புடைய தெரிநிலை, புதைநிலைக் கருத்துகள் இருப்பின் அவற்றையும் ஏற்றுக் கொள்ளலாம்.***

<table>
<tr><th colspan="4">நயங்கள்</th></tr>
<tr><td>1.</td><td colspan="3">ஓசை நயம்</td></tr>
<tr><td></td><td>1.1</td><td colspan="2">எதுகை</td></tr>
<tr><td></td><td></td><td>கண்ணி 1
வாழ்க்கை – ஆழ்ந்து

கண்ணி 2
காலை – சாலையில்

கண்ணி 3
நம்மைச் – செம்மை</td><td>கண்ணி 4
வியப்புற – தயக்கம்

கண்ணி 5
நாள்பொழு – நாள்பொழு

கண்ணி 6
நாள்பொழு – நாள்பொழு</td></tr>
<tr><td></td><td>1.2</td><td colspan="2">மோனை</td></tr>
<tr><td></td><td></td><td>கண்ணி 1
வாழ்க்கை – வந்துள்
ஆழ்ந்துள் – அனைத்துயி

கண்ணி 2
காலை – காரணம்
சாலையில் – தழுவும்

கண்ணி 3
நம்மைச் – ஞாயிறு
செம்மை – சேர்ந்து</td><td>கண்ணி 4
வியப்புற – வேறு
தயக்கம் – தழுவச்

கண்ணி 5
நாள்பொழு – நல்வழிக்கு
நாள்பொழு – நம்பிக்

கண்ணி 6
நாள்பொழு – நலமும்</td></tr>
<tr><td></td><td>1.3</td><td colspan="2">சந்தம்</td></tr>
<tr><td></td><td></td><td>நலமும் – வலுவும்</td><td></td></tr>
<tr><td></td><td>1.4</td><td colspan="2">இயைபு</td></tr>
<tr><td></td><td></td><td>அன்பினில் – களிப்பினில்
அழைத்திடும் – வூட்டிடும்</td><td></td></tr>
</table>

2.	**அணி நயம்**	
	2.1	**உருவக அணி**
		திருவிழா – வாழ்க்கை
	2.2	**பின்வருநிலை அணி**
		நாள்பொழுதெலாம் – நாள்பொழுதெலாம்
	2.3	**திரிபு அணி**
		நம்மை – செம்மை
	2.4	**தன்மை நவிற்சி அணி**
		நாள்பொழு தெலாம்அன் புறவுதான் நலமும் வலுவும் தந்திடும் நாள்பொழு தெலாம்உன் அன்புயிர் கணந்தொறும் வாழ உதவுமே
3.	**பொருள் நயம்**	
	3.1	**தெரிபொருள்**
		வாழ்க்கையில் அன்பு மிக இனிமையான தருணங்களைப் படைத்துக் கொடுக்கிறதுஅதைத் திருவிழாவாகக் கொண்டாடி வாழவேண்டும் என்று . கவிஞர் நயமாக எடுத்துரைக்கின்றார் .
	3.2	**புதைபொருள்**
		வாழ்க்கையில் காணும் யாவற்றையும் ரசித்து மகிழ்வுடன் வாழ்வதே சிறப்பு எனும் கருத்தை இக்கவிதையின்வழி நயமாகக் கவிஞர் உரைக்கின்றார்.
4.	**சொல்நயம்**	
		• ஆழ்ந்துள்ளோம் • ஒண்கதிர் • நேருற • புட்களின் • அன்பொலி • அன்புறவு • கணந்தொறும் • பல்லிசை

****   வேறு நயங்கள் இருப்பின் அவற்றையும் கவனத்தில் கொள்ளவும்.***

தாக்கம்

1. அன்பின் மேன்மையை உணர வைக்கின்றது.
2. வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்ற உணர்வு ஏற்படுகிறது.
3. அன்பான உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லையே என்ற வருத்தம் ஏற்பட்டது.
4. நம்முடைய ஒவ்வொரு செயலிலும் அன்பு வெளிப்பட வேண்டும் என்ற உணர்வு மேலோங்கியது.
5. வாழ்க்கையின் மதிப்புப் புரிந்தது.

படிப்பினை

1. வாழ்க்கையை எந்தச் சூழ்நிலையிலும் மகிழ்ச்சியாக வாழ்வதே சிறப்பு.
2. நாளெல்லாம் அன்புணர்வுடனே வாழ்தல் நலம்.
3. அன்பு நமக்கு நம்பிக்கையை ஊட்டும் என்பதால் அதனைப் போற்ற வேண்டும்.
4. அன்பின்வழி மக்களை இணைத்திட முடியும்.
5. அன்பு வாழ்வை நெறிப்படுத்தும்.
6. நமக்கு நலத்தையும் வலுவையும் தரும் அன்பைப் போற்ற வேண்டும்.

***	வேறு ஏற்புடைய தாக்கம் மற்றும் படிப்பினையையும் ஏற்றுக்கொள்ளலாம்.***

2.9	**மயில்**

<table>
<tr><td rowspan="8">கவிஞர் பின்னணி</td><td>இயற்பெயர்:</td><td>தி. இராசகோபாலன்</td></tr>
<tr><td>புனைபெயர்:</td><td>சுரதா</td></tr>
<tr><td>பிறப்பு:</td><td>23-11-1921(தமிழ்நாடு)</td></tr>
<tr><td>மறைவு:</td><td>19.6.2006</td></tr>
<tr><td>கல்வி/தொழில்:</td><td>• பள்ளி இறுதிவரை பயின்றார்
• எழுத்தாளர்</td></tr>
<tr><td>அடை:</td><td>• உவமைக்கவிஞர்</td></tr>
<tr><td>விருது/பரிசு:</td><td>• தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது</td></tr>
<tr><td>ஈடுபட்ட துறை:</td><td>• மரபுக் கவிதை
• இசைப்பாடல்
• கட்டுரை
• இதழியல்
• நாடகம்</td></tr>
<tr><td rowspan="3">கவிஞர் படைப்பு</td><td>வகைகள்:</td><td>• கவிதை இதழ்கள் (இலக்கியம், ஊர்வலம், விண்மீன், சுரதா)
• பாடல்கள் (இசைப்பாடல்கள்)</td></tr>
<tr><td>கொள்கை:</td><td>மொழிப்பற்று</td></tr>
<tr><td>கருப்பொருள்:</td><td>பல்வகைக் கருப்பொருள்களைத் தம்முடைய படைப்புகளில் கையாண்டுள்ளார்.</td></tr>
</table>

மயில்

அகவும் மயிலே அகவும் மயிலே!
கால மறிந்து கருமுகில் மழைதர
இளமணல் பரவிய எழில்மிகு காடெலாம்
முல்லை அரும்புகள் மெல்ல நகைக்கச்
சிவந்த பவளம் சிதறினாற் போன்று
தம்பலப் பூச்சிகள் தரைமீது தவழ
கைவிரல் போன்ற காந்தள் அரும்பெலாம்
நிமிர்ந்துநின் றெரியும் நெருப்பென மலரக்
கருநிற வண்டுகள் காந்தாரம் பாடிட
ஆடிக் களிக்கும் அழகிய மயிலே!
உன்விழி நீலம்! உன்தோகை நீளம்
உன்னுடல் மரகதம் உச்சிக் கொண்டையோ
கண்ணைக் கவர்ந்திடுங் காயா மலர்கள்!
ஆடும் பறவைநின் அடிகள் இரண்டும்
ஈரநொச்சியின் இலைகளே யாகும்!
மழைக்குரல் நின்குரல்; மலையே நின்மனை
செந்தமிழ் போன்று சிறந்த பறவைநீ!
அன்று நீ மணிமலை அருகிலே நின்று,
மணித்தேர் அசைந்து வருமொலி கேட்டுக்
கழுத்தை உயர்த்தும் கலைமான் போன்று நீ
உன்றன் கழுத்தை ஓங்கி உயர்த்தியும்
அண்ணாந்த மலையை அண்ணாந்து நோக்கியும்
இட்டசிற் றடியை எடுத்தெடுத் தூன்றியும்
வண்ணத் தோகையை வட்டமாய் விரித்தே
'ஓ'வெனும் எழுத்தை உண்டாக்கிக் காட்டினை;
கண்டேன் களித்தேன் மீண்டும் காண்கிறேன்!
நீட்டுயர் மேடையில் நாட்டிய மாடிக்
காட்டும் பறவையே கலவை மயிலே
தொங்கும் தோகையில் தொகைநிலை காண்கிறேன்
வண்ணத் தோகையில் வகைநிலை காண்கிறேன்
விரிக்கும் தோகையில் விரிநிலை காண்கிறேன்!
குறிஞ்சியே புணர்ச்சிக் குரிய திணையாம்
காதல் புரியவோ கார்காலம் சிறந்ததாம்
என்று தமிழர் இலக்கணம் வகுத்தனர்
வாழ்க்கை மாறினும் வகுத்த தமிழரின்
மயிலேநின் வாழ்க்கை மாறவே இல்லை!
அணிலின் சிறுவா லதுபோல் விளங்கும்
செந்தினைக் கதிரைத் தின்னும் மயிலே!
நின்பகை கோடை நெருப்பு வெயிலே
நீயெதிர் பார்ப்பது நீருண்ட முகிலோ!
ஒரேஒரு கேள்வி உனைநான் கேட்கிறேன்
ஆடுங் கலாபமே அருகில்வா இதைக்கேள்
கருவுற்ற முகிலைக் கண்டதும் நீயோ
ஆடு கின்றனை அதுசரி தோகையால்

ஈர முகிலினை ஏன்விசிறு கின்றனை?
சுரந்திடும் ஊற்றுநீர் சுடுமென் றெண்ணி
விசிறுவார் உண்டோ ஓலை விசிறியால்?
அஃறிணை மயிலே ஆராய்ந்து பார்த்துச்
செய்வதைச் செய்தால் சிரிப்புக் கிடமிலை
என்பதை அறிக என்மனங் கவர்ந்த
நாட்டியப் பறவையே நன்குநீ
ஆட்டு தோகையை; ஆடுக நீயே!

- **கவிஞர் சுரதா**

பாடுபொருள்:	உயிரினங்கள்
மையக்கரு:	மயிலின் அழகும் இயல்பும்

சொற்பொருள் விளக்கம்		
அகவும்	-	மயில் எழுப்பும் ஓசை
எழில்	-	அழகு
நகைக்க	-	மலர
தம்பலப்பூச்சிகள்	-	ஒரு வகை சிவப்பு நிறப் பூச்சிகள்
காந்தள்	-	மலர்
காந்தாரம்	-	ஏழு இசையில் ஒன்று
களிக்கும்	-	மகிழும்
மரகதம்	-	பச்சை நிறக் கல் (நவரத்தினத்தில் ஒன்று)
காயா மலர்	-	நீலநிற மலர்
மணித்தேர்	-	மணிகள் பூட்டப்பட்ட தேர்
தொகைநிலை	-	மறைந்திருக்கும் நிலை
வகைநிலை	-	பல வகை
விரிநிலை	-	வெளிப்படையாக தெரியும் நிலை
குறிஞ்சி	-	மலைப் பகுதி
புணர்ச்சி	-	கூடல்
கார்காலம்	-	மழைக்காலம்
செந்தினைகள்	-	கம்புப்பயிர்
நீருண்ட முகில்	-	மழை மேகம்
கலாபமே	-	ஆண்மயில் தோகை

தெரிநிலைக் கருத்துகள்

மயிலின் அகவல் ஓசை கேட்கிறது. கவிஞர் மயிலின் அழகைப் பாடுகின்றார்.

காலத்தின் தேவை அறிந்து கார்மேகங்கள் மழை தருகின்றன. மெல்லிய மணல் பரப்பைக் கொண்ட அழகிய காட்டில் முல்லை அரும்புகள் பூவாய் மலருகின்றன. தம்பலப்பூச்சிகள் சிதறிய சிவப்புப் பவளக் கற்களைப் போன்று தரையில் திரிகின்றன. காந்தள் அரும்புகள் மேல்நோக்கி எரியும் நெருப்பைப்போல் சிவப்பு வண்ணத்தில் மலர்கின்றன. கருவண்டுகள் ஒலி எழுப்பிப் பறக்க மகிழ்ச்சியில் ஆடுகின்றது அழகிய மயில்.

அவ்வழகிய மயிலின் விழி நீல நிறத்திலானது. அதன் தோகையோ மிக நீளமானது. உடல் மரகதக் கல்லின் நிறத்தைத் ஒத்திருந்தது. தலையில் கொண்டையோ அழகிய காயா மலராகக் காட்சியளித்தது. ஆடுகின்ற மயிலின் பாதங்கள் ஈர நொச்சி இலைகளாகத் தோன்றின. மழை பொழியும் வேளையை உணர்த்தும் குறியீடாக விளங்குவது மயிலின் அகவல். மலைப்பகுதியே மயிலின் வாழ்விடம். செழுமையான தமிழ்மொழி போன்றது மயில்.

ஒருமுறை அவ்வழகிய மயில் மணிமலை பக்கத்தில் நின்று மணிகள் பூட்டப்பட்ட தேர் அசைந்து வரும் ஒலியைக் கேட்டு கலைமானைப் போன்று கழுத்தை உயர்த்தி மலையைப் பார்த்தது. மெல்ல அடிகளை எடுத்து வைத்து தோகையை விரித்து நின்ற மயிலின் தோற்றம், ‘ஓ’வென்ற எழுத்தின் வடிவத்தை ஒத்திருந்தது. அக்காட்சியைக் கவிஞர் களிப்போடு கண்டார்.

அம்மயிலை மீண்டும் கவிஞர் காணும்போது, நீண்டு உயர்ந்த பகுதியில் நடனமாடிய மயிலின் தொங்குகின்ற தோகையில் அழகு மறைந்திருக்கின்றதைக் காண்கின்றார் கவிஞர். அதில் பல வகையான நிறங்களைக் காணுகின்றார். மேலும், அம்மயில் தோகையை விரித்து ஆடுகையில் அதன் முழுமையான அழகையும் காண்கின்றார் கவிஞர்.

குறிஞ்சி நிலப்பகுதியே காதலர்கள் கூடுகின்ற இடம் எனவும் மழைக் காலமே அவர்கள் சந்திப்பதற்கு ஏற்ற காலம் எனவும் தமிழர்கள் வகுத்து வைத்தனர். தமிழர்களின் அத்தகைய வாழ்க்கைப் போக்கு மாறிவிட்டாலும் மயிலின் வாழ்க்கை அந்நிலத்தில் மாறவேயில்லை.

அணில் வால்போல் இருக்கின்ற செந்தினையின் (கம்புபயிர்) கதிர்களைத் தின்னும் மயில்களுக்கு வெயில் காலம் ஒவ்வாது. குளிர்ச்சியான மழைக் காலத்தை எதிர்பார்த்தே மயில்கள் காத்திருக்கும். இப்படிப்பட்ட மயிலை நோக்கி, கவிஞர் ஒரு வினா எழுப்புகிறார். தோகை விரித்து ஆடுகின்ற ஆண் மயிலே! வானில் கருமேகங்களைக் கண்டு ஆடுகின்ற நீ, உன் தோகையைக் கொண்டு மழைமேகங்கள் களைய விசுறுவது ஏனோ? சுரந்திடும் நீர் சுடுமென்றெண்ணி யாராவது அதன் வெப்பம் தணிய விசிறியால் வீசுவார்களா என வினவுகின்றார். அஃறிணையான மயிலை நோக்கி, இத்தகைய செயலை ஆராய்ந்து செய்தால் தாழ்ச்சி இல்லை என அறிவுறுத்துகின்றார் கவிஞர்.

மயிலின் அழகில் திளைத்துப்போன கவிஞர் மீண்டும் அம்மயிலை ஆடக் கூறுகின்றார்.

புதைநிலைக் கருத்துகள்

1. குறிஞ்சி நிலப் பகுதியின் இயற்கை பொருள்களின் அறிமுகம்.

2. செந்தமிழின் சிறப்பு.

3. தமிழர் வாழ்வியலில் குறிஞ்சித் திணையின் பங்கினைக் குறிக்கின்றது.

4. செயலை விளைவு அறிந்து செய்ய வேண்டும்.

***** **வேறு ஏற்புடைய தெரிநிலை, புதைநிலைக் கருத்துகள் இருப்பின் அவற்றையும் ஏற்றுக் கொள்ளலாம்.***

நயங்கள்		
1.	**ஓசை நயம்**	
	1.1	**எதுகை (சீர் எதுகை)**
		அ**க**வும் – அ**க**வும் மு**ல்**லை – மெ**ல்**ல சி**வ**ந்த – சி**த**றினாற் உ**ன்**விழி – உ**ன்**தோகை ம**ழை**க்குரல் – ம**லை**யே நி**ன்**குரல் – நி**ன்**மனை அ**ண்**ணாந்த – அ**ண்**ணாந்து
	1.2	**மோனை**
		அகவும் – **அ**கவும் **கா**ல – **க**ருமுகில் **இ**ளமணல் – **எ**ழில்மிகு **சி**வந்த – **சி**தறினாற் **த**ம்பலப் – **த**ரைமீது **கை**விரல் – **கா**ந்தள் **நி**மிர்ந்து – **நெ**ருப்பு **க**ருநிற – **கா**ந்தாரம் **ஆ**டிக் – **அ**ழகிய **உ**ன்விழி – **உ**ன்தோகை **உ**ன்னுடல் – **உ**ச்சிக் **க**ண்ணைக் – **கா**யா **ஆ**டும் – **அ**டிகள் **ஈ**ரநொச்சி – **இ**லைகளே **ம**ழைக்குரல் – **ம**லையே **செ**ய்தமிழ் – **சி**றந்து **அ**ன்று – **அ**ருகிலே **ம**ணித்தேர் – **வ**ருமொலி **க**ழுத்தை – **க**லைமான் **உ**ன்விழி – **உ**ன்னுடல் **வா**ழ்க்கை – **ம**யிலே **நி**ன்பகை – **நீ**யெதிர் **ம**ழைக்குரல் – **ம**லையே **செ**ய்தமிழ் – **சி**றந்து **அ**ன்று – **அ**ருகிலே **ம**ணித்தேர் – **வ**ருமொலி **க**ழுத்தை – **க**லைமான் **உ**ன்விழி – **உ**ன்னுடல் **வா**ழ்க்கை – **ம**யிலே **நி**ன்பகை – **நீ**யெதிர்

	1.3	**சந்தம்**
		நீலம் - நீளம் அன்று - நின்று தொகைநிலை - வகைநிலை - விரிநிலை மயிலே - வெயிலே
	1.4	**இயைபு**
		உயர்த்தியும் - நோக்கியும் - தூன்றியும் மயிலே - வெயிலே காண்கிறேன் – காண்கிறேன்
2.	**அணி நயம்**	
	2.1	**உவமை அணி**
		• சிவந்த பவளம் சிதறினாற் போன்று • கைவிரல் போன்ற காந்தள் • நெருப்பென மலர • செந்தமிழ் போன்று சிறந்த பறவைநீ • அணிலின் சிறுவா லதுபோல் • கழுத்தை உயர்த்தும் கலைமான் போன்று
	2.2	**உருவக அணி**
		• உன்னுடல் மரகதம் – பச்சை நிறம் • காயா மலர்கள் – மயிலின் கொண்டை • ஈர நொச்சியின் இலைகள் – மயிலின் பாதம் • ஓலை விசிறியால் – மயிலின் தோகை
	2.3	**பின்வருநிலை அணி**
		• மயிலே – மயிலே • அகவும் – அகவும் • காண்கிறேன் – காண்கிறேன் • தோகையில் – தோகையில் • உன் – உன் • வாழ்க்கை – வாழ்க்கை
	2.4	**திரிபு அணி**
		• அன்று – நின்று • மயிலே – வெயிலே

	2.5	**தற்குறிப்பேற்ற அணி**
		• கால மறிந்து கருமுகில் மழைதர • தம்பலப் பூச்சிகள் தரைமீது தவழ • கருநிற வண்டுகள் காந்தாரம் பாடிட • முல்லை அரும்புகள் மெல்ல நகைக்க • நீருண்ட முகிலோ • ஈர முகிலினை ஏன்விசிறு கின்றனை? • ஓ வெனும் எழுத்தை உண்டாக்கி காட்டினை
	2.6	**தன்மை நவிற்சி அணி**
		• அகவும் மயிலே அகவும் மயிலே • ஆடும் பறவைநின் அடிகள் இரண்டும் • உன்விழி நீலம்! உன் தோகை நீளம் • வண்ணத் தோகையை வட்டமாய் விரித்து • கண்டேன் களித்தேன் மீண்டும் காண்கிறேன்
3.	**பொருள் நயம்**	
	3.1	**தெரிபொருள்**
		இயற்கையின் அற்புதமான படைப்பில் மயிலும் ஒன்றுதோகை விரித்தாடும் . இத்தகைய மயில் .மயிலின் அழகு அனைவரையும் கவரும் சக்தி வாய்ந்தது குளிர்ச்சியான குறிஞ்சி நிலப் பகுதியையும்மழைக்காலத்தையுமே அதிகம் விரும்புகிறது என்பதைக் கவிஞர் நயம்படக் கூறுகின்றார்.
	3.2	**புதைபொருள்**
		நம் பாரம்பரியத்தின் சின்னமாகவே மயில் கருதப்படுகிறதுசமயம் ., கலை, பண்பாடு என அனைத்திலும் மயில் இடம்பெற்றுள்ளதுஆகவே ., நாமும் மயிலை போற்றுதல் வேண்டும் என்பதைக் கவிஞர் நயமாகக் கூறுகின்றார்.
4.	**சொல்நயம்**	
		• காயா மலர்கள் • ஈர நொச்சியின் இலைகள் • நெருப்பென மலர • காந்தாரம் பாடிட • உன்னுடல் மரகதம் • ஓலை விசிறியால் • மழைக்குரல் • நாட்டியப் பறவை • நெருப்பென மலர • தொகைநிலை – வகைநிலை – விரிநிலை

		• நீருண்ட முகிலோ • ஆடுங் கலாபமே • கருவுற்ற முகில்

*** வேறு நயங்கள் இருப்பின் அவற்றையும் கவனத்தில் கொள்ளவும்.***

தாக்கம்

1. மயிலின் அழகில் மனம் மயங்கியது.

2. செந்தமிழை அழகிய மயிலுக்கு ஒப்பிடுவது அம்மொழியின் பெருமையை எனக்கு உணர்த்துகிறது.

3. தமிழர்கள் பலவற்றுக்கு இலக்கணம் வகுத்து வாழ்ந்தது பெருமையளிக்கிறது.

4. பல சிறப்புகளைக் கொண்ட மயிலைப் பாதுகாக்க வேண்டும் என்று உணர்வு தோன்றுகின்றது.

படிப்பினை

1. மயிலினம் அழியாமல் பாதுகாத்தல் அவசியம்.

2. தமிழர் வாழ்வியல் கூறுகளை அறிந்து நடைமுறைப் படுத்துவது சிறப்பு.

3. ஒரு செயலை ஆராய்ந்து செய்யவேண்டும்.

4. செந்தமிழைப் போற்றுவது நமது கடமை.

*** வேறு ஏற்புடைய தாக்கம் மற்றும் படிப்பினையையும் ஏற்றுக்கொள்ளலாம்.***

2.10	**காவியமும் ஓவியமும்**

கவிஞர் பின்னணி	**இயற்பெயர்:**	இரா. கணேசன்
	புனைபெயர்:	அதியமான், முரசு நெடுமாறன்
	பிறப்பு:	14.1.1937
	கல்வி/தொழில்:	• முனைவர் பட்டம் • ஆசிரியர் • பகுதிநேர விரிவுரையாளர்
	அடை:	பாப்பா பாவலர்
	விருது/பரிசு:	• பாவேந்தர் விருது (1998 - தமிழக அரசு - முதல் அயலகத் தமிழருக்குக் கிடைத்த விருது) • தமிழவேள் விருது (2001 - சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகம்) • முத்தமிழ் அரசு (2002 - உலகத் தமிழாசிரியர் பேரவை) • டான் ஸ்ரீ மாணிக்கவாசகம் புத்தகப் பரிசு (வெ.5000.00) • வாழ்நாள் சாதனையாளர் விருது
	ஈடுபட்ட துறை:	• கல்வி • எழுத்து (கவிதை, கட்டுரை, ஆய்வு) • இலக்கியம்
கவிஞர் படைப்பு	**வகைகள்:**	• கவிதைத் தொகுப்பு (மலேசியக் கவிதைக் களஞ்சியம்) • குழந்தைப் பாடல்கள் • குறுந்தட்டு (பாடிப் பழகுவோம்) • நாடகங்கள் • கவிதைத் தொகுப்பு (இளந்தளிர்) • வரலாற்று நூல் (மலேசியத் தமிழரும் தமிழும்)
	கொள்கை:	மொழிப்பற்று
	கருப்பொருள்:	பல்வகைக் கருப்பொருள்களைத் தம்முடைய படைப்புகளில் கையாண்டுள்ளார்.

காவியமும் ஓவியமும்

எழுத வேண்டுமென் றுணர்வு தூண்டப்
படிப்பறை சென்று பற்றினேன் தூவல்;
பழந்தாள் பொறுக்கிப் படியச் செய்தே
உணர்வுக் கலவையை ஓட விட்டேன்;
என்னை மறந்தே எழுதும் வேளையில்

ஏதோ ஒன்றென் உடலில் உரசும்
உணர்வு தோன்றினும் உளந்திருப் பாமல்
பாட்டாய்க் கனிந்து படைத்த வேளையில்
பாட்டுத் தேனைப் பாய்ச்சிய தூவல்
பறிபோ யிற்றுப் பதறி எழுந்தேன்!
புத்தம் புதிய புத்தகத் தினிலே
என்னிடம் பறித்த எழுது கோலால்
என்மகன் ஏதோ எழுத லுற்றான்!
காற்றொடு காற்றாய்க் கடலொடு கடலாய்ப்
பூவொடு பூவாய்ப் புனலொடு புனலாய்
ஒன்றிப் பாட்டாய் உணர்வின் எல்லையில்
நின்றிவ் வுலகை மறந்த வேளையில்
பிள்ளைப் பாசமா பிறக்கும்? உடனே
விரைந்து நூலை வெடுக்கெனப் பிடுங்கினேன்;
தூவலைப் பற்றித் தொடர்ந்தேன் பணியை.
வெம்பிய மகன்குரல் விழுந்தது செவியில்
மனமோ படைப்பின் வழியில் நடந்ததால்
மகனின் குரலோ மங்கித் தேய்ந்தது.
உணர்வு முற்றும் உருவங் கொண்டதும்
உற்ற பெருமிதம் உரைத்தல் கூடுமோ?
உலகெலாம் கையில் ஒடுங்கிய மகிழ்வில்
படைத்தஎன் பாட்டைப் படிக்கத் தொடங்கினேன்.
'அத்தான்' என்றொரு குரல்செவி மேவத்
திரும்பிப் பார்த்தேன்; மனையாள் ஆங்கே,
"உங்கள் திருமகன் உயர்கை வண்ணம்
பாரும்!" என்று பல்லெலாம் தெரியச்
சிரித்து நின்றாள்; திரும்பினேன்! அடடா!

எந்தக் கலைஞனும் எழுதிட முடியா
ஓவியக் காட்சிகள் ஒளிர்ந்தன சுவரில்!
அடுப்புக் கரியுடன் அருமை மகன்தான்
ஆங்கே அருங்கலை மணிபோல்
தேங்கும் மகிழ்ச்சி சிறக்கநின் றனனே!

- **கவிஞர் முரசு நெடுமாறன்**

பாடுபொருள்:	படைப்புணர்வு
மையக்கரு:	குழந்தையின் கலை உணர்வைப் போற்றுவோம்

சொற்பொருள் விளக்கம்		
தூவல்	-	எழுதுகோல்
பழந்தாள்	-	பழைய தாள்
உணர்வுக் கலவை	-	பலவித உணர்வு
புனலொடு புனலாய்	-	நீரொடு நீராய்
வெம்பி	-	மனம் வருந்தி
படைத்தவன்	-	உருவாக்கியவன்
குரல்செவி மேவ	-	குரல் காதுக்கு எட்ட
அருங்கலை மணிபோல்	-	கலையில் அரிய தேர்ச்சி பெற்றவன்போல்

தெரிநிலைக் கருத்துகள்

எழுதவேண்டும் என்ற உணர்வுத் தூண்டல் ஏற்பட்டதால், படிப்பறைக்குச் சென்று அங்குச் சிதறிக்கிடந்த பழைய தாள்களை எடுத்து ஒழுங்குபடுத்தினேன். பிறகு எழுதுகோலைக் கையில் எடுத்துப் பிடித்தவாறு, எழுதுவதற்கான கருப்பொருளைப் பற்றி யோசிக்கலானேன். அக்கருப்பொருளைப் பற்றிய பல்வேறு உணர்வுகளையும் மனத்தில் மெல்ல ஓடவிட்டுக் கற்பனையில் ஈடுபட்டிருந்தேன்.

கற்பனை வடிவம் பெற்று அதைக் கவிதையாக எழுதுவதில் என்னை மறந்து ஈடுபட்டிருந்தபோது, என் உடலில் ஏதோ ஒன்று உராய்வதுபோல உணர்ந்தாலும், அதனைப் பொருட்படுத்தாமல், எழுதிக்கொண்டிருந்த பாட்டில் மனம் இலயித்துவிட்டதால் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தேன். அப்போது, பாட்டு எழுதிக் கொண்டிருந்த என் எழுதுகோல் திடீரென்று பறிபோனதால் பதறி எழுந்தேன். என் மகன் என்னிடமிருந்து பறித்துக்கொண்ட அந்த எழுதுகோலால், அங்கிருந்த புத்தம் புதிய புத்தகம் ஒன்றில் ஏதேதோ எழுதத் தொடங்கினான்.

காற்றோடு காற்றுக் கலந்தது போலவும் கடலோடு கடல் கலந்தது போலவும் பூவோடு பூக் கலந்தது போலவும் நீரோடு நீர் கலந்தது போலவும் கற்பனையில் இரண்டறக் கலந்து ஒன்றி, உணர்வின் உச்சத்தில் நானிருந்த அந்த வேளையில், எழுதுகோலைப் பறித்த பிள்ளையின் மீது பாசம் தோன்றுவதற்கு வாய்ப்பில்லை.

விரைந்து சென்று மகன் எழுதத் தொடங்கிய புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கிவைத்துவிட்டு, அவன் கையிலிருந்த எழுதுகோலையும் பறித்து வந்து பாதியில் நின்ற கவிதையைத் தொடர்ந்து எழுதலானேன். எழுதுகோலையும் நூலையும் பறித்து அவன் எழுதுவதைத் தடுத்துவிட்டதால், மனம் வருந்தி மகன் அழுத குரல் என் செவியில் விழுந்தது என்றாலும், என் மனம் கவிதையைப் படைப்பதில் முழுமையாக ஒன்றி விட்டதால், மகனின் அழுகுரலை நான் பொருட்படுத்தவில்லை. எனவே, அவன் அழுகுரல் ஓசை படிப்படியாய் குறைந்து பின் நின்று போனது.

என் உணர்வு முழுமை பெற்றுக் கவிதையாய் உருவானதும் என் மனத்தில் ஏற்பட்ட பெருமிதத்தை விளக்கத்தான் முடியுமா என்ன? உலகம் முழுவதுமே என் கைக்குள் ஒடுங்கிவிட்டது போன்ற மகிழ்ச்சியுடன், நான் படைத்த பாடலை படிக்கத் தொடங்கினேன்.

அப்போது 'அத்தான்' என்ற குரல் வந்த பக்கம் திரும்பிப் பார்த்தேன். அங்கே, என் மனைவி, 'உங்கள் திருமகனுடைய உயர்ந்த கைவண்ணத்தைப் பாருங்களேன்" என்று சிரித்தபடி நின்றிருந்தாள்.

அவள் காட்டிய பக்கமாய்த் திரும்பினேன். அடடா! எந்தக் கலைஞனாலும் தீட்ட முடியாத அரிய ஓவியங்கள் வீட்டுச் சுவரில் காட்சியளித்தன. அருகில், ஓவியக் கலையில் அரிய தேர்ச்சி பெற்ற பெருங்கலைஞன் போன்ற தோற்றத்தில், கையில் அடுப்புக்கரியுடன் என் அருமை மகன் மகிழ்ச்சியில் பொங்கிப் பூரித்தவாறு நின்றிருந்தான்.

புதைநிலைக் கருத்துகள்

1. பிள்ளைகளின் கலையார்வத்தை ஊக்குவிக்க வேண்டும்.

2. குழந்தைகளுக்கே உரிய செயல்பாடுகளைப் பெற்றோர்கள் இரசிக்க வேண்டும்.

3. பிறரின் புறக்கணிப்புகளை நமது வெற்றிகளாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

4. குழந்தையின் உளவியலை அறிந்து செயல்படவேண்டும்.

**** வேறு ஏற்புடைய தெரிநிலை, புதைநிலைக் கருத்துகள் இருப்பின் அவற்றையும் ஏற்றுக் கொள்ளலாம்.***

நயங்கள்		
1.	**ஓசை நயம்**	
	1.1	**எதுகை (சீர் எதுகை)**
		வே**ண்**டுமென் – தூ**ண்**ட பு**த்**தம் – பு**த்**தகத் கா**ற்**றொடு – கா**ற்**றாய்க் க**ட**லொடு – க**ட**லாய்க் பு**ன**லொடு – பு**ன**லாய் வெ**டு**க்கெனப் – பி**டு**ங்கினேன்
	1.2	**மோனை**
		படிப்பறை – **ப**ற்றினேன் **ப**ழந்தாள் – **ப**டியச் **உ**ணர்வுக் – **ஓ**ட **எ**ன்னை – **எ**ழுதும் **ஒ**ன்றென் – **உ**டலில் – **உ**ரசும் **உ**ணர்வு – **உ**ளந்திருப் **பா**ட்டாய்க் – **ப**டைத்த **பா**ட்டுத் – **பா**ய்ச்சிய **ப**றிபோ – **ப**தறி **பு**த்தம் - **பு**திய – **பு**த்தகத் **எ**ன்னிடம் – **எ**ழுது **எ**ன்மகன் - **ஏ**தோ – **எ**ழுத **கா**ற்றொடு - **கா**ற்றாய்க் - **க**டலொடு - **க**டலாய்ப் **பூ**வொடு - **பூ**வாய்ப் - **பு**னலொடு – **பு**னலாய் **ஒ**ன்றிப் – **உ**ணர்வின் **பி**ள்ளைப் – **பி**றக்கும் **வி**ரைந்து – **வெ**டுக்கெனப் **தூ**வலைப் – **தொ**டர்ந்தேன் **வெ**ம்பிய – **வி**ழுந்தது **ம**னமோ – **வ**ழியில் **ம**கனின் – **ம**ங்கித் **உ**ணர்வு – **உ**ருவங் **உ**ற்ற – **உ**ரைத்தல் **உ**லகெலாம் – **ஒ**டுங்கிய **ப**டைத்தளன் - **பா**ட்டைப் – **ப**டிக்கத் **உ**ங்கள் – **உ**யர்கை **பா**ரும் – **ப**ல்லெலாம் **சி**ரித்து – **தி**ரும்பினேன் **எ**ந்தக் – **எ**ழுதிட **ஓ**வியக் – **ஒ**ளிர்ந்தன **அ**டுப்புக் – **அ**ருமை

		ஆங்கே – **அ**ருங்கலை **தே**ங்கும் – **சி**றக்கறின்
	1.3	**இயைபு**
		• கடலாய் – புனலாய் • எல்லையில் – வேளையில்
2.	**அணி நயம்**	
	2.1	**உவமை அணி**
		• அருங்கலை மணிபோல் • காற்றொடு காற்றாய் • கடலொடு கடலாய் • பூவொடு பூவாய் • புனலொடு புனலாய்
	2.2	**உருவக அணி**
		• பாட்டுத்தேனை – இனிமையான பாட்டு
	2.3	**உயர்வி நவிற்சி அணி**
		உலகெலாம் கையில் ஒடுங்கிய மகிழ்வில் எந்தக் கலைஞனும் எழுதிட முடியா ஓவியக் காட்சிகள் ஒளிர்ந்தன சுவரில்!
	2.4	**தன்மை நவிற்சி அணி**
		எழுத வேண்டுமென் றுணர்வு தூண்ட படிப்பறை சென்று பற்றினேன் தூவல்
3.	**பொருள் நயம்**	
	3.1	**தெரிபொருள்**
		தந்தை எழுதுவதைப் பார்த்த மகன் தானும் எழுத விரும்பித் தந்தையிடமிருந்து எழுதுகோலைப் பறித்து எழுத முற்படுவதைத் தந்தை தடுத்த போதும் மனம் தளராத மகன் அடுப்புக்கரி கொண்டு சுவற்றில் அற்புதமாக ஓவியம் தீட்டியதைக் கவிஞர் நயமாகக் கூறுகின்றார்.

	3.2	**புதைபொருள்**
		படைப்புணர்வுக்கு வயது வேறுபாடில்லை .ஆகவே, குழந்தைகளின் படைப்பின் ஆர்வத்தைத் தடைசெய்யாது ஆதரிக்க வேண்டும் என்பதைக் கவிஞர் நயமாகக் கூறுகின்றார்.
4.	**சொல்நயம்**	
		• உணர்வுக் கலவையை • பாட்டுத் தேனை • அருங்கலை மணிபோல் • தேங்கும் மகிழ்ச்சி • மங்கித் தேய்ந்தது • உளந்திருப்பாமல் • உயர்கை வண்ணம் • வெம்பிய மகன் குரல் • ஒடுங்கிய மகிழ்வில் • குரல் செவிமேவ

****   வேறு நயங்கள் இருப்பின் அவற்றையும் கவனத்தில் கொள்ளவும்.***

தாக்கம்

1. பிள்ளைகளின் இயல்பூக்கத்தை அலட்சியப்படுத்தக் கூடாது என்ற உணர்வு மேலோங்கியது.

2. பிள்ளைகளின் எதிர்பார்ப்பைப் புறக்கணித்தது மனத்தில் நெருடலை ஏற்படுத்தியது.

3. பிள்ளைகளின் கிறுக்கல்களையும் இரசிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது.

படிப்பினை

1. பிள்ளைகளின் கலையுணர்வைக் கட்டுப்படுத்துவது அவர்களின் ஆர்வத்தை மழுங்கச் செய்யும்.

2. எந்த வேளையிலும் பிள்ளைகளின் எதிர்பார்ப்பிற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும்.

3. பிள்ளகளின் கலைப்படைப்புகளை மதிக்கக்கூடிய மனப்பக்குவம் இருத்தல் நலம்.

4. உயர்ந்த கலையுள்ளம் வேண்டும்.

5. குழந்தையின் உளவியலை அறிந்து செயல்படவேண்டும்

* ***வேறு ஏற்புடைய தாக்கம் மற்றும் படிப்பினையையும் ஏற்றுக்கொள்ளலாம்.***

2.11	காடு

கவிஞர் பின்னணி	**இயற்பெயர்:**	சி. ஆறுமுகம்
	புனைபெயர்:	பாதாசன்
	பிறப்பு:	29-4-1943 (மலேசியா)
	கல்வி/தொழில்:	• தமிழ்க்கல்வி • எழுத்தாளர்
	அடை:	• மணிக்கவிஞர்
	விருது/பரிசு:	• டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் புத்தகப் பரிசு
	ஈடுபட்ட துறை:	• மரபுக் கவிதை • கதை • கட்டுரை • இதழியல் • பத்திரிகை
கவிஞர் படைப்பு	**வகைகள்:**	• கவிதை (பாதாசன் கவிதைகள்) • கட்டுரை (ஞாயிறு களம், சமூகப் பார்வை)
	கொள்கை:	மொழிப்பற்று
	கருப்பொருள்:	பல்வகைக் கருப்பொருள்களைத் தம்முடைய படைப்புகளில் கையாண்டுள்ளார்.

காடு

கல்தோன்றி மண்தோன்றிக் கடின மாகிக்
காசினியை உருச்செய்த பின்னர்ப் பச்சைப்
புல்தோன்றிச் செடிதோன்றிக் கொடியும் தோன்றிப்
பூதமென வளர்ச்சியுள மரமும் தோன்றி
எல்லாமொன் றாய்ச்சேர்ந்து வீசுங் காற்று
எரிகதிரோன் குளிர் நிலவாள் நுழையா வண்ணம்
வல்லடர்த்தி இருள் சேர்ந்த தென்பாம் காடே
மனிதகுல முதல் தலையோர் வாழ்ந்த வீடே!

காட்டிலுள்ள நன்மரங்கள் வீடாய் மாறும்
கனிகளெலாம் நமக்குணவாய்ச் சுவைகொ டுக்கும்!
பாட்டிசைக்க நமக்கெல்லாம் கற்றுத் தந்த
பறவைவருந் தும்தம்மின் கூட்டில் வாழ்ந்து
ஆட்டத்தை மயில்பாம்பு மானின் கூட்டம்
அவற்றிடம்நாம் கற்றோமே; எண்ணிப் பார்த்தால்
காட்டிலுள்ள ஒவ்வொன்றும் பயனை நல்க
நாட்டிலுள்ள நாம்யார்க்கும் பயனற் றோமே!

நண்பகலில் காடுபெறும் இருளே இன்று
நந்தமிழின் இருளாம்; நள் ளிரவுப் போதில்
சொன்னஅந்தக் காட்டினிலே சேரி ருட்டுத்
துயருறுநம் தமிழ்க்குலத்து வாழ்வி ருட்டே!
நண்பகலில் நள்ளிரவில் அமைதி யின்றி
நடுக்காட்டில் பலசத்தம் கேட்டல் போல
ஒன்றுபடும் குணமில்லாத் தமிழ் மக்கள்
உறையுமிடத் தில்நாளும் சத்தம் கேட்கும்.

பெண்ணவளின் மேனியிலே சேர்ந்த ஆடை
பிடிப்பாக உடல்தழுவி இருத்தல் போன்று,
வன்மரத்தோ டிணைந்தபடி கொடிகள் ஏறும்;
வளர்ந்தபெரு மரங்களின்வேர் நீண்டே பக்கம்
நின்றிருக்கும் மரவேரில் நன்றாய்ப் பின்னும்;
நினைத்தபடி தடையிற்படர் கொடிக ளுள்ளே
சென்றுவிளை யாடும்சில உயிர்கள்! தாயைச்
சேர்ந்திருக்கும் பிள்ளைவிளை யாடல் போன்று!

மானமுள்ள வாழ்க்கைக்குக் கவரி மானே
வாய்த்திடுநல் உவமையென்பார்? அஞ்சா மைக்குக்
கானகத்துப் புலிசிங்க வாழ்வைச் சொல்வார்!
காதலுக்கும் கற்பிற்கும் அன்றில் பண்பே
வானகத்தார் பண்பினுக்கும் மேலாம் என்பார்;
மானிடர்க்கு வாழ்வுநெறி கற்றுத் தந்த
கானகமே! என்னகமே! குளிர்ந்த நெஞ்சால்
கவின்தமிழால் வாழ்த்துகிறேன் வாழ்க வாழ்க!

- **கவிஞர் பாதாசன்**

பாடுபொருள்:	காட்டின் வளம்
மையக்கரு:	காடு காட்டும் வாழ்வியல்

சொற்பொருள் விளக்கம்		
காசினியை	-	பூமியை
பூதமென	-	பெரிய உருவம்
எரிகதிரோன்	-	வெப்பமான கதிரவன்
வல்லடர்த்தி	-	மிக அடர்த்தி
நந்தமிழின்	-	நம் தமிழ்
சேரிருட்டு	-	சேருகின்ற இருள்
உறையும்	-	வாழும்
வன்மரத்தோடிணைந்த	-	உறுதியான மரத்தோடு சேர்ந்த
அன்றில்	-	ஒரு வகை பறவையினம் (இணைகளில் ஒன்று இறந்து விட்டால் மற்றொன்றும் தன் உயிரை மாய்த்துக் கொள்ளும்.)
வானகத்தார்	-	தேவர்கள்
கவின்தமிழால்	-	அழகு தமிழால்

தெரிநிலைக் கருத்துகள்

கண்ணி 1

கல்லும் மண்ணும் தோன்றி இறுகி பூமி உருவானது. பின்பு பசுமையான புல்லும் செடிகொடிகளும் தோன்றின. தொடர்ந்து பருத்து உயர்ந்த மரங்களும் தோன்றின. இவையெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து வீசுகின்ற காற்றும் வெப்பமான கதிரவன் மற்றும் குளிர் நிலவின் ஒளியும் ஊடுருவாத மிக அடர்த்தியான இருள் சூழ்ந்த இடமே காடு. பூமியில் தோன்றிய ஆதி மனித இனத்தின் வாழ்விடமும் காடுதான்.

கண்ணி 2

காட்டு மரங்கள் நாம் வீடுகள் கட்டுவதற்கு மூலப்பொருளாய் அமைகின்றன. காட்டில் கிடைக்கும் பழ வகைகள் நமக்கு உணவாகின்றன. நமக்குப் பாட்டிசைக்கக் கற்றுத் தந்த பறவையினம் கூட்டில் அடைபட்டுத் துன்பப்படுகிறது. மயில், பாம்பு, மான் போன்ற விலங்குகளிடமிருந்து ஆட்டத்தையும் கற்றுக் கொண்டோம். இவை அனைத்தையும் எண்ணிப் பார்க்கும்போது காட்டிலுள்ள ஒவ்வொன்றும் மனிதன் பயன்பெற உதவுகின்றன என்பதை அறிகின்றோம். ஆனால், நாட்டில் வாழும் நாமோ யாருக்கும் பயனற்று வாழ்கிறோம்.

கண்ணி 3
காட்டின் அடர்த்தி, நண்பகலிலும் வெளிச்சமற்ற நிலையை உருவாக்கும். இன்றைய நிலையில் நம் தமிழ்மொழியின் நிலைமையும் அவ்வாறாகவே உள்ளது. நள்ளிரவில் காட்டில் சேர்கின்ற இருள் துன்பப்படுகின்ற நம் தமிழர்களின் வாழ்க்கைக்கான குறியீடாகக் காட்டப்படுகின்றது. இரவிலும் பகலிலும் காட்டில் தொடர்ந்து பேரிரைச்சல் அமைதியைக் குலைப்பதுபோல் ஒற்றுமையில்லா தமிழர்கள் கூடி வாழுமிடத்திலும் அமைதி இருக்காது.

கண்ணி 4
பெண்கள் அணிந்திருக்கின்ற ஆடை அவர்கள் உடலை இறுக்கமாகப் பற்றியிருப்பதைப் போல உறுதியான மரங்களில் கொடிகள் பற்றிக்கொண்டு ஏறும். உயர்ந்து வளர்ந்திட்ட மரங்களின் வேர்கள் நீண்டு பக்கத்தில் வளர்ந்திருக்கின்ற மரத்தின் வேரோடு பின்னிக் கொள்ளும். தாயைச் சேர்ந்திருக்கின்ற குழந்தை விளையாடுவதைப் போன்று காட்டில் எல்லையற்றுத் தரையில் படர்ந்திருக்கும் கொடிகளுக்கிடையில் சில உயிரினங்கள் விளையாடிக் கொண்டிருக்கும்.

கண்ணி 5
மனிதனின் மதிப்புமிகு வாழ்க்கையை உணர்த்துவதற்குக் கவரிமானின் இயல்பையே உவமையாகக் கூறுவர். துணிச்சலோடு செயல்படுவதற்குக் காட்டில் வாழும் சிங்கம் மற்றும் புலியின் அஞ்சாமையைச் சுட்டிக் காட்டி உணர்த்துவர். காதல் மற்றும் கற்பு வாழ்க்கையில் சிறக்க காட்டில் வாழும் அன்றில் பறவைகளின் பண்பை வானவருக்கும் மேலான பண்பாகச் சொல்லி விளக்குவர். இப்படி மனிதர்களுக்கு வாழ்க்கையின் நெறிகளைக் கற்றுத் தந்த காடு மனிதனின் வீடு என்பதை உணரவேண்டும். காட்டின் இச்சிறப்புகளை எண்ணி இனிய மனம் கொண்டு அழகிய தமிழால் வாழ்த்துகின்றார் கவிஞர்.

புதைநிலைக் கருத்துகள்

1. காட்டைப் பாதுகாக்க வேண்டும்.
2. மனித வரலாறு உணர்த்தப்படுகிறது.
3. இயற்கை நமக்குப் பல பாடங்களைக் கற்றுக் கொடுத்திருக்கின்றது.
4. காடு மனிதர்களுக்குப் பயனுள்ளதாக இருப்பதுபோல் நாமும் பிறருக்குப் பயனாய் இருக்க வேண்டும்.
5. தமிழர்களின் ஒற்றுமை ஓங்க வேண்டும்.
6. சில வனவிலங்குகளின் தன்மைகள் மனிதனுக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன.
7. மானம், வீரம், அன்பு, கற்புநெறி போன்றவை தமிழர்களின் வாழ்வியல் கூறுகள்.

* ***வேறு ஏற்புடைய தெரிநிலை, புதைநிலைக் கருத்துகள் இருப்பின் அவற்றையும் ஏற்றுக் கொள்ளலாம்.***

நயங்கள்			
1.	**ஓசை நயம்**		
	1.1	**எதுகை**	
		கண்ணி 1 க**ல்**தோன்றி – பு**ல்**தோன்றி எ**ல்**லாமொன் –வ**ல்**லடர்த்தி **கண்ணி 2** கா**ட்**டிலுள்ள – பா**ட்**டிசைக்க ஆ**ட்**டத்தை – கா**ட்**டிலுள்ள **கண்ணி 3** ந**ண்**பகலில் – சொ**ன்**ன ந**ண்**பகலில் – ஒ**ன்**றுபடும்	**கண்ணி 4** பெ**ண்**ணவளின் – வ**ன்**மரத்தோ நி**ன்**றிருக்கும் – செ**ன்**றுவிளை **கண்ணி 5** மா**ன**முள்ள – கா**ன**கத்துப் வா**ன**கத்தார் – கா**ன**கமே
	1.2	**மோனை**	
		கண்ணி 1 **க**ல்தோன்றி – **கா**சினியை **பு**ல்தோன்றி – **பூ**தமென **எ**ல்லாமொன் – **எ**ரிகதிரோன் **வ**ல்லடர்த்தி – **ம**னிதகுலம் **கண்ணி 2** **கா**ட்டிலுள்ள – **க**னிகளெலாம் **பா**ட்டிசைக்க – **ப**றவை **ஆ**ட்டத்தை – **அ**வற்றிடம் **கண்ணி 3** **ந**ண்பகலில் – **ந**ந்தமிழின் **சொ**ன்ன – **து**யருறுநம் **ந**ண்பகலில் – **ந**டுகாட்டில் **ஒ**ன்றுபடும் – **உ**றையுமிடத்	**கண்ணி 4** **பெ**ண்ணவளின் – **பி**டிப்பாக **வ**ன்மரத்தோ – **வ**ளர்ந்தபெரு **நி**ன்றிருக்கும் – **நி**னைத்தபடி **செ**ன்றுவிளை – **சே**ர்ந்திருக்கும் **கண்ணி 5** **மா**னமுள்ள – **வா**ய்த்திடுநல் **கா**னகத்துப் – **கா**தலுக்கும் **வா**னகத்தார் – **மா**னிடர்க்கு **கா**னகமே – **க**வின்தமிழால்
	1.3	**சந்தம்**	
		காடே – வீடே காட்டிலுள்ள – நாட்டிலுள்ள	

	1.4	**முரண் தொடை**
		எரிகதிரோன் – குளிர்நிலவாள் காட்டிலுள்ள – நாட்டிலுள்ள நண்பகலில் – நள்ளிரவில் பயனை நல்க – பயனற் றோமே
2.	**அணி நயம்**	
	2.1	**உவமை அணி**
		• நடுக்காட்டில் பல சத்தம் கேட்பது போல • பெண்ணவளின் மேனியிலே சேர்ந்த ஆடை பிடிப்பாக உடல்தழுவி இருத்தல் போன்று • தாயைச் சேர்ந்திருக்கும் பிள்ளை விளையாடல் போன்று • கவரிமானே • அன்றில் பண்பே • புலிசிங்க வாழ்வு • பூதமென
	2.2	**உருவக அணி**
		• எரிகதிரோன் – கதிரவன் ஆணாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது • குளிர் நிலவாள் – நிலவு பெண்ணாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது
	2.3	**பின்வருநிலை அணி**
		• தோன்றி – தோன்றி • நண்பகலில் – நண்பகலில் • வாழ்க – வாழ்க • காட்டிலுள்ள - காட்டிலுள்ள
	2.4	**திரிபு அணி**
		• காட்டிலுள்ள – நாட்டிலுள்ள • காடே – வீடே • கல்தோன்றி – புல்தோன்றி
	2.5	**தற்குறிப்பேற்ற அணி**
		• பாட்டிசைக்க நமக்கெல்லாம் கற்றுத் தந்த

	2.6	**தன்மை நவிற்சி அணி**	
		• கல்தோன்றி மண்தோன்றிக் கடின மாகிக் • வல்லடர்த்தி இருள் சேர்ந்த தென்பாம் காடே	
3.	**பொருள் நயம்**		
	3.1	**தெரிபொருள்**	
		உலகம் தோன்றியது முதலே காடுகளும் உருவாகியுள்ளனபல்வகை . விலங்குகளின் சரணாலயமாக விளங்கும் காடு மனிதனின் பல்வேறு .தேவைகளையும் பூர்த்தி செய்கிறதுகாட்டில் வாழும் விலங்குகளும் மனிதனின் மேலான வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. இவற்றைக் கவிஞர் நயம்படக் கூறுகின்றார்.	
	3.2	**புதைபொருள்**	
		ஆதிகாலம் தொட்டே காடு மனித வாழ்க்கையில் பெரும் பங்காற்றி வருகிறது .ஆகவே, அது தொடர்ந்து நிலைத்திருப்பதை மனிதன் உறுதி செய்ய வேண்டுமென்பதைக் கவிஞர் நயம்படக் கூறுகின்றார்.	
4.	**சொல்நயம்**		
		• காசினியை • பூதமென வளர்ச்சி • எரிகதிரோன் • குளிர்நிலவாள் • வல்லடர்த்தி இருள்	• நந்தமிழ் • வன்மரத்தோடிணைந்த • அன்றில் பண்பே • கானகமே என்னகமே • கவின்தமிழால்

****   வேறு நயங்கள் இருப்பின் அவற்றையும் கவனத்தில் கொள்ளவும்.***

தாக்கம்

1. காட்டின் அழகில் மனம் இலகுவானது.
2. கவிதை தந்த இயற்கை உணர்வோடு இசைந்ததில் மனம் மகிழ்ச்சியுற்றது.
3. இயற்கை சார்ந்த விழிப்புணர்வு ஏற்பட்டது.
4. காட்டைப் பற்றிய தகவல்கள் மனத்திற்கு விருந்தாகின.
5. துயருறும் தமிழர்களின் வாழ்வைக் காட்டுடன் இணைத்துப் பார்க்க வைக்கிறது.

படிப்பினை

1. காட்டைப் போற்றிப் பாதுகாத்தல் நலம்.
2. தமிழர்கள் ஒற்றுமையுடன் இருத்தல் அவசியம்.
3. காடு சார்ந்த விழிப்புணர்வு வேண்டும்.
5. காடு வழங்கும் வாழ்க்கை நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
6. நம் வாழ்க்கையில் பிறருக்குப் பயனளிக்கும் வகையில் வாழவேண்டும்.

* ***வேறு ஏற்புடைய தாக்கம் மற்றும் படிப்பினையையும் ஏற்றுக்கொள்ளலாம்.***

2.12	பெண்கள் விடுதலைக் கும்மி

கவிஞர் பின்னணி	**இயற்பெயர்:**	சி.சுப்பிரமணியன்
	புனைபெயர்:	• பாரதியார் • ஷெல்லிதாசன் • சக்திதாசன்
	பிறப்பு:	11.12.1882 (தமிழ்நாடு)
	மறைவு:	12.9.1921
	கல்வி/தொழில்:	• தமிழ்க்கல்வி • அலகாபாத் பல்கலைக்கழகத்தில் நுழைவுத் தேர்வு • தமிழாசிரியர்
	அடை:	• முண்டாசுக் கவிஞன் • மகாகவி
	விருது/பரிசு:	• கலைமகள் எனும் பொருள்படும் 'பாரதி' என்ற பட்டத்தை எட்டயபுர மன்னர் வழங்கினார். • தமிழ் தேசியக் கவி
	ஈடுபட்ட துறை:	• எழுத்துத்துறை (கவிதை, மொழிபெயர்ப்பு, கட்டுரை) • பத்திரிகைத்துறை (சுதேசமித்திரன் 1904-1906) • கல்வித்துறை (தமிழாசிரியர்)
கவிஞர் படைப்பு	**வகைகள்:**	• கவிதைகள் • கட்டுரை • கதை • மொழிபெயர்ப்பு • சித்திர விளக்கங்கள்
	கொள்கை:	தேசியம்
	கருப்பொருள்:	பல்வகைக் கருப்பொருள்களைத் தம்முடைய படைப்புகளில் கையாண்டுள்ளார்

பெண்கள் விடுதலைக் கும்மி

பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
பேசிக் களிப்பொடு நாம்பாடக்
கண்களிலே ஒளி போல உயிரில்
கலந்துஒளிர் தெய்வம் நல் காப்பாமே. (கும்மி)

கும்மி யடி! தமிழ்நாடு முழுதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோம் என்று கும்மியடி! (கும்மி)

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமைஎன்று
எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்;
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். (கும்மி)

மாட்டை அடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே,
வீட்டினில் எம்மிடம் காட்டவந்தார், அதை
வெட்டி விட்டோம் என்று கும்மியடி! (கும்மி)

நல்ல விலைகொண்டு நாயை விற்பார், அந்த
நாயிடம் யோசனை கேட்பது உண்டோ?
கொல்லத் துணிவுஇன்றி நம்மையும் அந்நிலை
கூட்டிவைத்தார் பழி சூட்டி விட்டார். (கும்மி)

கற்பு நிலைஎன்று சொல்லவந்தார், இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்;
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். (கும்மி)

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கேபெண்
இளைப்பில்லை காண்என்று கும்மியடி!(கும்மி)

வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோம் என்று கும்மியடி!
சாதம் படைக்கவும் செய்திடுவோம்; தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம். (கும்மி)

காதல் ஒருவனைக் கைபிடித்தே, அவன்
காரியம் யாவிலும் கைகொடுத்து,
மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சிபெறச்செய்து வாழ்வமடி! (கும்மி)

- **மகாகவி பாரதியார்**

பாடுபொருள்:	பெண்ணுரிமை
மையக்கரு:	பெண் விடுதலை

சொற்பொருள் விளக்கம்		
ஒளிர் தெய்வம்	-	அருள் தரும் தெய்வம்
கும்மி	-	தமிழரின் நடனக் கலை
பிசாசுகள்	-	தீயசக்திகள்
விந்தை மனிதர்	-	மாறுபட்ட மனிதர்
வசக்கி	-	துன்புறுத்தி
பாரினில்	-	உலகினில்
இளைப்பில்லை	-	குறைந்தவளில்லை
தெய்வச் சாதி	-	கடவுளுக்கு நிகரான தலைமுறை
மாதர்	-	பெண்கள்
மாட்சிபெற	-	சிறப்புற

தெரிநிலைக் கருத்துகள்

கண்ணி 1
பெண்கள் பல வகையான அடக்குமுறைகளிலிருந்தும் அடிமைத் தனத்திலிருந்தும் விடுபட்டு விட்டார்கள். விடுதலை பெற்றுவிட்டதைப் பற்றிப் பேசி மகிழ்ந்து பாடுகின்றவேளையில் நம் உயிரில் கலந்து அருள் தரும் தெய்வம் துணை நிற்கட்டும்.

கண்ணி 2
தமிழ்நாடு முழுமையும் பெண்கள் விடுதலையை எண்ணி மகிழ்ந்திட கும்மியடித்துக் கொண்டாட வேண்டும். பெண்ணினத்தை அடிமைப்படுத்திய தீய சக்திகள் விலகி நல்வினைகள் சூழ்ந்ததை எண்ணிக் கொண்டாட வேண்டும்.

கண்ணி 3
பெண்கள் கல்வி பெறுவது ஆகாது என்று எண்ணம் கொண்டவர்களெல்லாம் அழிந்து போனார்கள். மேலும், பெண்கள் வெளி உலகம் அறியாமல் இருக்கவேண்டும் என்ற மாறுபட்ட எண்ணம் கொண்ட மனிதர்கள் அவமானப்பட்டது பெண்ணினத்திற்குக் கிடைத்த விடுதலை.

கண்ணி 4
மாட்டை அடித்துத் துன்புறுத்தி தொழுவத்தில் கட்டி வைக்கும் வழக்கத்தைப் போன்று வீட்டில் பெண்களிடமும் வன்முறை நிகழ்த்த வந்தவர்களை வீழ்த்தியதை எண்ணி கும்மியடித்துக் கொண்டாடி மகிழவேண்டும்.

கண்ணி 5
அதிக விலை கொடுத்து நாய்கள் விற்றாலும் அவற்றிடம் ஆலோசனகள் கேட்கப்படுவதில்லை. இப்படி இழிவாகக் கருதப்பட்ட பெண்களைக் கொல்ல துணிச்சல் இன்றி நம்மையும் இத்தகைய செயல்களுக்கு உடந்தையாக்கினர். அதேவேளையில் பெண்களின் மீது தீராப் பழியைச் சுமத்திவிட்டனர்.

கண்ணி 6
கற்பெனப்படுவது ஆண்,பெண் இருவருக்கும் பொதுவானதே எனும் புரிதலை முன்னெடுக்க வேண்டும். பெண்களின் அனுமதியின்றிக் கட்டாயத் திருமணங்கள் செய்துவைக்கும் வழக்கத்தை அடியோடு போக்கிடவேண்டும்.

கண்ணி 7
உலகில் உயர் பதவிகள் கொண்டு வழிநடத்துவதும் பொது ஒழுங்கமைப்பை உறுதி செய்யும் விதிகளை அமைப்பதிலும் பெண்கள் முனைந்துவிட்டார்கள். ஆணுக்கு இணையான அறிவை உடைய பெண் எந்நிலையிலும் குறைந்தவளில்லை என்பதை எண்ணி மகிழ்ந்து கொண்டாடவேண்டும்.

கண்ணி 8
வாழ்க்கையின் நெறிகளை இயற்றவும் அறத்தை நிலைநாட்டவும் பெண்கள் புறப்பட்டுள்ளனர் என்பதை எண்ணிக் கொண்டாட வேண்டும். பெண்களால் சமைக்கவும் முடியும். அதேவேளையில் கடவுளுக்கு நிகரான தலைமுறையை உருவாக்கவும் முடியும்.

கண்ணி 9
தன் மனத்திற்குப் பிடித்த ஆணைத் திருமணம் செய்து அவன் செயல்களுக்குத் துணையாக நிற்கவேண்டும். பெண்கள் குறித்த பழமைச் சிந்தனைகளை நீக்கி அவர்களின் வாழ்க்கை நிலையை உயரச் செய்யவேண்டும்.

புதைநிலைக் கருத்துகள்

1. பெண்கள் எல்லா நிலைகளிலும் தங்களின் நிலையை உயர்த்திக்கொள்ள வேண்டும்.

2. ஆண் பெண் சமநிலைப் போக்கு மேலோங்க வேண்டும்.

3. பெண் விடுதலையின் அவசியம் உணர்த்தப்படுகிறது.

4. திருமணத்தை உறுதிசெய்யும் முடிவைப் பெண்களிடமும் விட வேண்டும்.

**** வேறு ஏற்புடைய தெரிநிலை, புதைநிலைக் கருத்துகள் இருப்பின் அவற்றையும் ஏற்றுக் கொள்ளலாம்.***

நயங்கள்			
1.	**ஓசை நயம்**		
	1.1	**எதுகை**	
		கண்ணி 1 பெ**ண்**கள் – க**ண்**களிலே **கண்ணி 2** கு**ம்**மி – ந**ம்**மைப் **கண்ணி 3** ஏ**ட்**டையும் – வீ**ட்**டுக்குள்ளே **கண்ணி 4** மா**ட்**டை – வீ**ட்**டினில் **கண்ணி 5** ந**ல்**ல – கொ**ல்**லத்	**கண்ணி 6** க**ற்**பு – வ**ற்**புறுத்திப் **கண்ணி 7** ப**ட்**டங்கள் – எ**ட்**டும் **கண்ணி 8** வே**த**ம் – சா**த**ம் **கண்ணி 9** கா**த**ல் – மா**த**ர்
	1.2	**மோனை**	
		கண்ணி 1 **பெ**ண்கள் – **பே**சிக் **க**ண்களிலே – **க**லந்துஒளிர் **கண்ணி 2** **கு**ம்மி – **கு**லுங்கிடக் **ந**ம்மைப் – **ந**ன்மை **கண்ணி 3** **ஏ**ட்டையும் – **எ**ண்ணி **வீ**ட்டுக்குள்ளே – **வி**ந்தை **கண்ணி 4** **மா**ட்டை – **மா**ட்டும் **வீ**ட்டினில் – **வெ**ட்டி **கண்ணி 5** **ந**ல்ல – **நா**யிடம் **கொ**ல்ல – **கூ**ட்டிவைத்தார்	**கண்ணி 6** **க**ற்பு – **க**ட்சிக்கும் **வ**ற்புறுத்திப் – **வ**ழக்கத்தைத் **கண்ணி 7** **ப**ட்டங்கள் – **பா**ரினில் **எ**ட்டும் – **இ**ளைப்பில்லை **கண்ணி 8** **வே**தம் – **வே**ண்டி **சா**தம் – **சா**தி **கண்ணி 9** **கா**தல் – **கா**ரியம் **மா**தர் – **மா**ட்சி

	1.3	**சந்தம்**
		பட்டங்கள் – சட்டங்கள் வேதம் – சாதம் ஆள்வதும் – செய்வதும்
	1.4	**இயைபு**
		கும்மியடி – கும்மியடி விட்டார் – கவிழ்ந்தார் வைப்போம் – மிதித்திடுவோம்
	1.5	**முரண் தொடை**
		ஆணுக்கு இங்கே**பெண்**
2.	**அணி நயம்**	
	2.1	**உவமை அணி**
		• கண்களிலே ஒளி போல
	2.2	**உருவக அணி**
		• பிசாசுகள் – பெண்களுக்கு இழைக்கப்பட்ட தீமைகள்
	2.3	**பின்வருநிலை அணி**
		• கும்மியடி – கும்மியடி • படைக்கவும் – படைக்கவும் • நம்மைப் – நம்மை
	2.4	**திரிபு அணி**
		• பட்டங்கள் – சட்டங்கள் • வேதம் – சாதம்
	2.5	**தன்மை நவிற்சி அணி**
		பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள் பேசிக் களிப்போடு நாம்பாட

3.	**பொருள் நயம்**	
	3.1	**தெரிபொருள்**
		பெண்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களிலிருந்து விடுபட்டுவிட்டனர் என்பதை எண்ணிக் கும்மியடித்து மகிழவேண்டும் என்பதைக் கவிஞர் நயம்படக் கூறுகிறார்.
	3.2	**புதைபொருள்**
		பெண்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தையும் உரிமையையும் நன்முறையில் பயன்படுத்தி வாழ்வில் மேன்மையடைய வேண்டுமென்பதைக் கவிஞர் நயமாக எடுத்துரைக்கின்றார்.
4.	**சொல்நயம்**	
		• தெய்வச் சாதி • பிசாசுகள் • வசக்கி • மாதர் அறங்கள்

****   வேறு நயங்கள் இருப்பின் அவற்றையும் கவனத்தில் கொள்ளவும்.***

தாக்கம்

1. பெண்களுக்கெதிரான அடிமைத்தனமும் வன்முறைகளும் மன வேதனையை ஏற்படுத்துகின்றது.

2. சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது.

3. பெண்கள் விடுதலை பெற்றார்கள் என்பதைப் பாரதி பாடுகையில் மனத்தில் எழுச்சியும் எல்லையில்லா மகிழ்ச்சியும் எழுகிறது.

4. பெண்கள் மீது, பண்பற்ற செயல்கள் கண்டு கடுஞ்சினம் எழுகிறது.

படிப்பினை

1. பெண்களுக்குக் கல்வி அவசியம்.

2. பெண்கள் தங்களின் உரிமைகளை விட்டுக் கொடுக்கக் கூடாது.

3. பெண்ணடிமை கண்டிக்கத்தக்கது.

4. ஆண்களுக்குச் சிறுவயதிலிருந்தே பெண்களைப் போற்றும் நெறிகளைக் கற்றுத் தருதல் அவசியம்.

5. பெண்கள் ஆண்களுக்கு நிகராகச் சவால்களை எதிர்கொள்ள வேண்டும்.

** வேறு ஏற்புடைய தாக்கம் மற்றும் படிப்பினையையும் ஏற்றுக்கொள்ளலாம்.*

Bahagian Pembangunan Kurikulum
Kementerian Pendidikan Malaysia
Aras 4-8 Blok E9, Kompleks Kerajaan Parcel E,
62604 Putrajaya.
Tel: 03-8884 2000 Fax: 03-8888 9917
http://bpk.moe.gov.my